Registered M. 916.

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்ய ஸபைப்

## பத்ரிகை.

ஸம்புடம் 3.] ப்ரமாதிசஹு ஆனிமீ. [ஸஞ்சிகை 5.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

1. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 161.

2. ஸங்க்ரமண புண்யகால நிர்ணயம்
ஸ்ரீ. மஹாமஹோபாத்யாயர் ரங்காசார்யர் ... ... 168.

3. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்
ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசார்யர் ... ... 171.

4. ஆர்ய வித்யை
ஸ்ரீ. கி. இ. ஶடகோபாசார்யர் ... ... 188.

5. கடிதங்கள் ... ... ... ... ... ... 195.

6. பிரிவுகளின் அறிக்கை ... ... ... ... 198.

7. வர்த்தமானம் ... ... ... ... ... 199.

ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபையின் கார்யதர்ஶியால்
ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

---

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

---

*Copy-right reserved*

Annual Subscription Rs. 2-0-0] [Single Copy As. 3.

# THE VEDANTA DIPIKA.

## A MONTHLY TAMIL JOURNAL

OF

## HINDU RELIGION AND PHILOSOPHY.

*Editor.*—S. VASUDEVACHARIAR B. A., L. T.

---

Vol. 3—No. 5.

---

*June 1913.*


---

## NOTICE.

All contributions etc. should be addressed to **The Editor**, and all business letters, money orders etc. to **The Manager**, the Vedanta Dipika, 11 Kesavaperumal Sannidhi Street, Mylapore, Madras. Communications intended for publication in the succeeding issue should, as far as possible, reach the Editor not later than the 15th of the month. The Secretaries of affiliated associations are requested to send in every month advertisements and reports of meetings for publication.

Subscribers are requested to send their subscriptions for Vol. 3 as early as possible. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர்" என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும், கட்டணம் கட்டுவதும், விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும், மற்றெல்லா விஷயங்களும் "மானேஜர், வேதாந்ததீபிகை, கேசவப்பெருமாள் ஸந்நிதி வீதி, மயிலாப்பூர்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

ஒவ்வொரு மாஸத்திலும் 15உக்குள் கிடைக்கும் விஷயங்கள் தான் அந்தந்த மாஸத்து ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்படும். ப்ரதி மாஸமும் பிரிவுகளின் கார்யதர்சிகள் அங்கங்கு நடக்கும் விசேஷ வ்ருத்தாந்தங்களை தீபிகையில் ப்ரசுரம் செய்யும்பொருட்டு எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தா தாரர்கள் எல்லாரும் மூன்றாவது வருஷச் சந்தாவை விளம்பமில்லாமல் அனுப்பவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.**

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அகோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச௵ ஆனி௴ [ஸஞ்சிகை 5.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible]

**ஸ்ரீ அஹோபில மடம்.** நாளது ப்ரமாதீச வருஷம் ஆடி மாஸம் 3உ ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதியில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் நடக்கிறதென்றும், அந்த மஹோத்ஸவத்திற்கு ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களெல்லாரும் வந்திருந்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவித்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் மந்த்ராக்ஷதை பெற்றுக்கொண்டு போகவேண்டுமென்றும் ஸ்ரீ அழகிய சிங்கர் க்ருபையுடன் ஸ்ரீமுகம் நியமித்திருக்கிறார். அந்த நியமநத்தை ப்ரெஸ்ஸினால் அங்கீகரித்து அந்த நியமநப்படி அந்த மஹோத்ஸவகாலத்தில் அவ்விடம் விடைகொண்டு அப்பொழுது அங்கே ஸம்பவிக்கக்கூடிய ஸாத்விக கோஷ்டீ ஸுகாதிகளை "ஈட்டங்கண்டி

டக்கூடுமேல் அதுகாணும் கண்பயனாவதே" என்றபடி அநுபவித்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மனுடைய கடாக்ஷத்தினாலும் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவடிகளுடைய ஸேவையினாலும் ஆத்மலாபத்தைத் தேடிக்கொள்ளவேண்டும் என்கிற ஆஸ்தை தீவ்ரமாக மநஸ்ஸில் இருக்கையிலும், தேஹபோஷக மார்க்கமான லௌகிக வ்யாபாராதிகளில் ப்ரவ்ருத்தித்து அவைகளின் நிர்பந்தத்தால் வருந்தி இம்மாதிரியான மநோரதங்களை நிறைவேற்றிக்கொள்ள அஶக்தர்களாக இருக்கும் அஸ்மதாதிகள் மீது ஸ்ரீ அழகியசிங்கர் க்ஷமைகொண்டு, தைஹிகமாக ஸந்நிஹிதர்களாக இராமற்போனாலும் மாநஸிகமாக ஸந்நிஹிதர்களாக இருக்கும் அடியோங்களை வாத்ஸல்ய பூர்வம் அநுக்ரஹிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

யதார்த்தமாகவே ஸ்ரீ அஹோபில மடம் போன்ற ஆசார்ய ஸ்தாநங்கள் ஏற்படாவிட்டால், கலிப்ராபல்யத்தால் எப்பொழுதும் விஷயப்ரவணர்களாகவும் தர்மாதர்ம விவேகமற்றும் வர்த்தித்துவரும் ஜீவகோடிகளின் உஜ்ஜீவநம் எவ்விதமாக ஸம்பவிக்கும்? இந்த ஆசார்யர்கள் தேஶாத் தேஶம் ஸஞ்சரித்து அஜ்ஞாநமாகிற அந்தகாரத்தால் மூடப்பட்டு ஸம்ஸாரத்தில் உழன்றுகொண்டு இருக்கும் சேதநர்களுக்கு விவேகமுண்டாகும்படி தத்வோபதேஶாதிகளைச் செய்ய அஶக்தர்களாக இருந்தாலும், அவர்களுடைய ஸத்வோத்தரமாக இருக்கும் ஸத்தையே ஆகர்ஷகம் என்பதில் ஆக்ஷேபமுண்டோ? பற்பல இடங்களில் பற்பல ஸாத்விகர்கள் இம்மாதிரியாக ஜநித்து, ரஜஸ் தமஸ் ஸம்பந்தமான சித்தவ்ருத்தியையும் அதனால் உண்டாகும் வாசிக காயிக வ்யாபாரங்களையும் கிட்ட அணுகவொட்டாமல் தடுத்து எப்பொழுதும் பகவத் பக்தியினாலும் அதற்கு அநுகுணமான ஸாத்விக எண்ணங்களாலும் நிறைந்த மநஸ்ஸையுடையவர்களாய் வர்த்தித்து வந்தால், அப்படி வர்த்திப்பதால் உண்டாகும் ஒரு ஶக்தி பஹுதூரம் வ்யாபித்து அதற்கு உட்பட்டிருக்கும் ஜீவகோடிகள் எல்லாவற்றையும் ஸந்மார்க்கத்தில் நிஶ்சயமாக ஆகர்ஷித்தே தீரும் இவ்விதமாக ஒரு விமோசநம் ஏற்பட்டாலொழிய, வேறு ஸம்ரக்ஷணோபாய

மொன்றும் இப்பொழுது இருக்கும் ஸ்திதியை விமர்ஶிக்கும் நமக்குத் தென்படாது. ஆகையால், ஆத்யந்திகமான ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டும் என்கிற எண்ணம் கொண்டிருக்கும் நாம் எல்லாரும், ஸ்ரீ அஹோபிலமடம் போன்ற ஆசார்ய ஸ்தானங்களெல்லாம் ஜகத்தின் உஜ்ஜீவநத்தைச் செய்விக்குமளவு ஸத்வோத்தரங்களாக இருக்கவேண்டுமென்றும், அவைகளின் அத்யக்ஷத்வத்தை வஹிக்குமவர்களெல்லாரும் வைஷம்ய நைர்க்ருண்யங்களற்று அநிதர ஸாதாரணமான கல்யாண குணங்கள் பொருந்தினவர்களாய் ஶத்ருமித்ரோதாஸீந பாவனையின்றிக்கே ஸர்வ ஜகத்துக்கும் ஹிதத்தை ஆஶம்ஸித்துக்கொண்டு வர்த்தித்து வரவேண்டுமென்றும், ஆஸ்தாந ஸந்நிதாநத்தில் ஸந்நிஹிதர்களாக இருக்கும்படியான மஹாபாக்யம் பெற்றவர்களும் வேதார்த்த பரிஶீலந ஶீலர்களாக இருப்பதுடன் அஶரண்யர்களாக வருந்தும் சேதநர்களை ஆகர்ஷித்து அவர்களுக்கு ஆஹ்லாதத்தை உண்டாக்குமளவு ஸாதுத்வத்தால் நிறைந்தவர்களாக இருக்க வேண்டுமென்றும் பத்தாஞ்ஜலிபுடர்களாக எப்பொழுதும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திப்போம்.

“𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌷𑍍𑌟𑌪𑌜𑌨𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑌸𑍍𑌯
𑌸𑌂𑌵𑌚𑍍𑌚 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌜𑌨𑌸𑍍𑌯 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 ।
𑌯𑌦𑍍𑌵𑌾 𑌶𑌰𑌣𑍍𑌯𑌮𑌶𑌰𑌣𑍍𑌯𑌜𑌨𑌸𑍍𑌯 𑌪𑌣𑍍𑌯𑌂”
𑌤𑌦𑍍𑌯𑌤𑌾𑌂 𑌨𑍃𑌹𑌰𑌿𑌯𑌾𑌃 𑌸𑌤𑌾𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 ॥

∴ ∴ ∴

**ஸங்க்ரமண ஶ்ராத்தம்.**

சென்ற பங்குனி மாஸத்திய ஸஞ்சிகையில் ஸங்க்ரமண ஶ்ராத்தகால விஷயமாகச் செய்யப்பட்டிருந்த ஒரு ப்ரஶ்நத்திற்கு ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாயர் பெருகவாழ்ந்தான் ரங்காசார்ய ஸ்வாமீ ஒரு நிர்ணயம் ஸாதித்திருக்கிறார். அதை இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். த்ருடமாகவும் அஸந்திக்தமாகவு முள்ள ஶாஸ்த்ர ப்ரமாணத்தைக்கொண்டு அவர் செய்திருக்கும் நிர்ணயத்தை ஆஸ்திக ஶிரோமணிகளான மற்றை

வித்வாங்கள் பரிஶீலநம் செய்து, அது ஆக்ஷேபார்ஹமாக இருந்தால் அதை அநுஷ்டாநத்திற்குக் கொண்டுவர முயலவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். இப்பொழுது இந்த ப்ராத்த விஷயமான அநுஷ்டாநங்கள் அத்யந்தம் பிந்நங்களாக இருக்கின்றன என்பது ஸுப்ரஸித்தம். வ்யபதிஷ்டர்களாக இருக்குமவர்களுக்குள்ளாகவே இம்மாதிரியான வைவித்யம் நேர்ந்துவிட்டால், கர்மாநுஷ்டாநங்களை ஒரு பெரிய உபத்ரவமாக எண்ணும் ஸ்வபாவமுள்ள அநேக ஸாமாந்ய ஜநங்கள் ஆத்யந்திகமாக இதை விட்டுவிடுவதற்கு அது ஒரு முக்யஹேதுவாகும்; மிதஜ்ஞர்களாக இருந்தாலும் ஶாஸ்த்ர விஶ்வாஸமுள்ள மற்றும் சிலர், 'வ்யவஸ்தை ஒன்றும் தெரியவில்லையே; ஒரு பக்ஷத்தை அநுஸரித்து அநுஷ்டித்தால் மற்றொரு பக்ஷ க்ரமப்படி கர்மலோபம் ஸம்பவித்துவிடுமோ!' என்று பயந்து வருந்துவதற்கும் அது காரணமாகும். ப்ரஜைகளுக்கு இம்மாதிரியான நாஶம் வரக்கூடாது என்று எண்ணும் ஸ்வபாவமுள்ள வித்வாங்கள் எல்லாரும் இதுவிஷயமான சர்ச்சையைப் பூர்ணமாக செய்து சீக்கிரத்தில் ஏக முகமான ஒரு ஸித்தாந்தத்திற்கு வருவார்களென்று நம்புகிறோம்.

∴ ∴ ∴

**கர்மாநுஷ்டாநம்.**

கீழ்ச்சொல்லப்பட்டிருக்கும் இந்த ப்ரஸ்தாவம் அது ஸம்பந்தமான மற்றொரு விஷயத்தை ஸ்மரிப்பிக்கிறபடியால், அதையும் இவ்விடத்தில் கொஞ்சம் விசாரிப்போம். காலாநுகுணமாகப் பாஷாந்தராதிகளை அப்யஸித்து அவைகளில் ஸம்பாதிக்கப்பட்ட நிஷ்பத்தியைக்கொண்டு குடும்பபோஷணார்த்தம் ராஜஸேவை ப்ரப்ருதியான பராதீந வ்ருத்தியை அவலம்பித்திருக்கும் 'லௌகிகர்' என்று வ்யவஹரிக்கப்படு மவர்களில் அநேகர், தங்களுடைய நித்ய நைமித்திக கர்மங்களை விதிவத்தாக அதற்கு விஹிதமான காலங்களில் அநுஷ்டிக்க அஶக்தர்களாய் கௌணரீதியாகவும் கௌண காலங்களிலும் அவைகளை அநுஷ்டித்து வருகிறார்கள். பாஷாந்தராதிகளை அப்யஸிக்காமல் வேதத்திற் சொல்லப்பட்ட மார்க்கத்தில் நடப்பதாகச் சொல்லிக்கொண்டு அந்தக்

காரணத்தால் 'வைதிகர்' என்று பெயர் பூண்டு இருப்பவர்களில் அநேகரும், குடும்பபோஷணத்தை உத்தேசித்தே நிர்பந்தங்களை உண்டு பண்ணக்கூடிய க்ருஷி பௌரோஹித்யம் முதலிய வ்ருத்திகளை அவலம்பித்து அந்த நிர்பந்தங்களால் உப்ருத்தர்களாய்த் தமது நித்ய நைமித்திக கர்மங்களை முற்கூறிய மாதிரியே கௌண ரீதியாகவும் கௌண காலங்களிலும் அநுஷ்டித்து வருகிறார்கள். இவர்களுடைய கதி என்ன? கர்ம ப்ரம்ஶம் ஏற்பட்டு அதனால் பாதித்யம் உண்டாகி பகவதநுக்ரஹத்திற்கு ஸர்வதா அநர்ஹர்களாகவே இவர்கள் ஆகிவிடுவார்களோ? இல்லாவிட்டால் இவர்களுக்கும் உஜ்ஜீவநம் உண்டா? என்பதுதான் இப்பொழுது நமக்கு விசாரிக்கவேண்டிய அம்ஶம்.

"வியிஊ்ஷ்டம் த ய்ககூ கரொதுவியிநா த யஃ-
ஹஸ்ம் கிம்வித் வாவொதி க்லெஶாதும் த தஸ்ய தக"

என்கிற வ்ருத்த மநுவினுடைய வாக்யம், 'ஶாஸ்த்ரங்களிற்சொல்லப்பட்டிருக்கும் கால தேஶாதி நியமங்களை அதிக்ரமித்துச்செய்யப்படும் கர்மங்களெல்லாம் செய்யப்படாதவைகளுக்குத் துல்யங்கள்' என்று சொல்லுகின்றது. இவ்விதமாகவாவது கர்மங்களின் ஶக்த த்யாகத்தாலாவது கர்மலோபம் ஸம்பவித்தால், அவர்களுக்கு பகவந்நிக்ரஹம் உண்டாகிறது என்றும் இந்தலோகத்திலும் ஶ்ரேயோஹாநி ஸம்பவிக்கிறது என்றும்

"ஶ்ருதிஃ ஸ்ம்ருதி ஊமெவாஜ்ஞா யஸ்தாமுல்லங்வ்ய வததெ।
ஆஜ்ஞாச்செதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவஃ॥"

என்கிற பகவத் வாக்யமும்,

"யெ நாஸ்திகா நிஷ்க்ரியாஶ்ச ஶாஸ்த்ராதிகவிநஃ।
கயமாஜ்ஞா உாவாரா ஹெ ஹவந்தி மதாயாஷஃ॥"

என்கிற ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியின் வாக்யமும் இன்னும் இவை போன்ற அநேக வாக்யாந்தரங்களும் சொல்லுகின்றன. இவைகளெல்லாவற்றையும் பார்த்தால், ஸந்த்யாவந்தநாதிகளைக்கூட யதாக்ரமம் அநுஷ்டிக்கக் கூடாதவர்களாக இருக்கும் நாம் பகவதநு

க்ரஹத்திற்கு ஆசைப்படுவது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதற்குத் துல்யமாகு மென்றே தோன்றும்.

ஆனால், நாம் இதில் கவனிக்க வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. கர்ம ந்யூநதை இரண்டு விதமாக ஸம்பவிக்கக் கூடும். சாஸ்த்ரங்களில் விச்வாஸ மின்றிக்கே, வேதங்கள் அப்ரமாணங்க ளென்றும், மஹர்ஷிகளாற் சொல்லப்பட்டிருக்கும் வாக்யங்கள் குத்ஸிதங்க ளென்றும், ப்ரத்யக்ஷ ஸுகதுக்க க்ருதமான வ்யவஸ்தை நீங்கலாக மற்ற எந்த வ்யவஸ்தையும் இல்லை யென்றும் எண்ணிக்கொண்டு அவச்யமான கர்மங்களை அநுஷ்டிக்காமலே விட்டுவிடுவது ஒரு விதமான ந்யூநதை; குடும்ப போஷண பாரத்தால் வருந்திக்கொண்டு பராதீநதையை ஸம்பாதிப்பது தவிர்த்து வேறு ஒரு உபாயத்தையும் குடும்ப போஷகமாகக் காணமல் கீழ்க்கூறப்பட்டிருக்கும் ராஜஸேவை க்ருஷி முதலிய வ்ருத்திகளை அவலம்பித்து அவைகளின் நிர்பந்தத்தால் யதோக்தமான கால தேசங்களில் கர்மங்களைச் செய்ய அசக்தர்களாய் கௌணகாலாதிகளில் அவைகளை அநுஷ்டிப்பதால் உண்டாகும் ந்யூநதை மற்றொருவிதம். இந்த இரண்டு ந்யூநதைகளையும் பகவாந் துல்யங்களாக பாவித்து இரண்டிலும் ஆஜ்ஞாத்ரோஹம் ஏற்படுகிறது என்று அவர் திருவுள்ளம் பற்றுகிறதாக நாம் அர்த்தம் சொல்வது ந்யாயமாகுமா? "ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ" என்கிற வாக்யம் சாஸ்த்ரங்களில் விச்வாஸமில்லாமல் கர்மத்யாகம் செய்பவர்களுக்கு அந்வயிக்குமே தவிர அசக்தியால் கர்மாநுஷ்டாநத்தில் ஒரு குறைவைச் செய்பவர்களுக்கு அந்வயிக்காது என்றே தோன்றுகிறது.

"ஸர்வேஷாமேவ வேதாநாம் வேதாங்காநாம் சைவ ஸம்ஹிதம்।
ஸர்வவர்ணாச்ச ஸர்வத்ர வர்ணாச்ரமநிஷேவிணாம்॥"

என்கிற வஸிஷ்ட வாக்யம், இதற்கு நியாமகமாகும். அசக்தியால் கர்மங்களுக்குக் குறைவு ஸம்பவித்தால், அந்தக் குறைவு பகவந் நிக்ரஹத்தைக் கொடுக்கக்கூடியதானாலும், அம்மாதிரியான நிக்ரஹத்திற்கு நாம் பாத்ரமாகாதபடி நம்மை ஸம்ரக்ஷித்துக்கொ

ள்ள உபாயமொன்று இருக்கிறது என்பதுதான் நமக்கு ஆச்வாஸத்தைக் கொடுக்கிறது. ஒரு சாஸ்த்ராதிலங்கநம் நேர்ந்து விட்டால், 'அஹோ! துஷ்க்ருதம் நேர்ந்துவிட்டதே!' என்கிற அநுதாபம் நமக்கு ஜநிக்கும்; சாஸ்த்ரத்தில் அவிச்வாஸிகளாக இருப்பவர்களுக்கு அப்படிப்பட்ட அநுதாபம் ஜநிக்க ஹேதுவில்லை. இந்த அநுதாபம் பகவத் தயோந்மேஷக மென்பதற்கு

"க்ருதே பாபேऽநுதாபோ வை யஸ்ய பும்ஸ:
ப்ரஜாயதே । ப்ராயச்சித்தம் து தஸ்யைகம் ஹரிஸம்ஸ்மரணம்
பரம்"

என்பது முதலிய மஹர்ஷிகளின் வாக்யங்களே ப்ரமாண மாகின்றன. ஆகையால், நித்ய நைமித்திக ரூபங்களான கர்மங்கள் நமக்கு ப்ராப்தமாகும் காலங்களில் அவைகளை நம்முடைய ஸர்வாத்ம பக்திக்குப் பாத்ரமாகும் ஸ்ரீபகவானுடைய ஆஜ்ஞைகள் என்று உணர்ந்து, யதாசக்தி கால தேசாதிகளுக்கு அதிக்ரமம் வாராமல் அவைகளை அநுஷ்டிக்க நாம் ஆரம்பித்து, அப்படி விதிவத்தாக நடத்த முயல்வது நம்முடைய வ்ருத்தியின் பங்கத்திற்கு ஹேதுவாகும் போலத் தோன்றினால், அப்படி நேரும் வ்ருத்தி பங்கம் அஸஹ்யமாக இருக்கும் பக்ஷத்தில், சாஸ்த்ரோக்தமான நியமத்திற்குக் கொஞ்சம் ந்யூநதையை ஸம்பாதித்தாவது அநுசயத்துடன் கூடின ஹ்ருதயத்தோடு அந்தக் கர்மங்களை நாம் அநுஷ்டித்தால், அதில் உண்டாகும் குறைவைப் பரம க்ருபாளுவான பகவான் நம்முடைய பச்சாத்தாபத்தை ஆதாரமாகக் கொண்டு க்ஷமித்தும் நம்மை அநுக்ரஹிப்பர் என்றே நம்புகிறோம்.

"நிரவயிஷு க்ருதேஷு பாபஸ்வஹோ
உதிரநுசயிநீ யதி ஸ்யாத் த்வத: ।
பாத ஹி உபயதே ந ஸம்சயோஹ்யேஹ
நிரநுசயயியோ ஹதா ஹ்யேஹ வயம் ॥"

∴ ∴ ∴

ஸ்ரீ:

# ஸங்க்ரமண புண்யகால நிர்ணயம்.

ஸ்ம்ருதி ரத்நாகரம், ஸ்ம்ருதி முக்தாபலம் என்கிற ஆந்ஹிக க்ரந்தங்களில், ஸ்நாநப்ரகரணத்தில், அயந விஷு விஷ்ணுபதி ஷடசீதி முதலிய ஸங்க்ரமங்களுக்குத் தனித்தனியாகப் புண்யகாலங்கள் ஸ்நாந தாநாதிகளுக்காகச் சொல்லப்பட்டிருக்கின்றனவே தவிர, ஶ்ராத்தங்களுக்காகச் சொல்லப்படவில்லை. ஸ்நாநஞ் செய்யாமற்போனால் ஏழுஜந்மங்களில் ரோகியாகவும் துக்கியாகவும் ஆய்விடுவானென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஶ்ராத்தத்தைப்பற்றி ப்ரவர்த்தித்திருக்கிற ஸார்வபௌமருடைய பித்ருமேதஸார ஸுதீவிலோசநங்களிலும், தீக்ஷிதருடைய ஶ்ராத்த காண்டத்திலும், ஶ்ராத்தங்களை ஏகோத்திஷ்டமென்றும் பார்வணமென்றும் இரண்டுவிதமாகப் பிரித்து, ஏகோத்திஷ்டம் ஒருவனையே உத்தேசித்துச் செய்வது, பார்வணம் பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹர்களாகிய மூன்று பேர்களை யுத்தேசித்துச் செய்யக்கூடியதென்று சொல்லி, பிரித்த ஶ்ராத்தங்களைச் செய்யக் காலம் சொல்லும் ப்ரகரணத்தில், வ்ருத்தி ஶ்ராத்தத்திற்கு உதயம்முதல் 6 நாழிகைவரையில் (ப்ராத: காலம்) காலம், ஆமஶ்ராத்தத்திற்குப் பகலில் முன்பாதியாகிய (பூர்வாண்ஹம்) காலம், ஏகோத்திஷ்டத்திற்கு 12 நாழிகைக்குமேல் 18 நாழிகைவரையில் (மத்யாந்ஹம்) காலம்; பார்வணத்திற்கு 18 நாழிகைக்குமேல் 24 நாழிகைவரையில் (அபராண்ஹம்) காலமென்றுங் கால வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. ஸங்க்ரமண ஶ்ராத்தங்கள் மூன்றுபேர்களை யுத்தேசித்துச் செய்யப்படுவதனால், பார்வணஶ்ராத்தங்களென்பதிற் சந்தேகமில்லை.

வேதாந்த தீபிகையில் உதாஹரித்த யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியின் ஆசார காண்டத்தில் 217, 218-வது ஶ்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கிற ஶ்ராத்தங்கள், பார்வண ஶ்ராத்தங்கள்தான்; அவைகளில் ஸங்க்ரம ஶ்ராத்தங்களும் அடங்கியிருக்கின்றன. 219 - முதல் 225 - வரையில் 7 - ஶ்லோகங்களால், மேற்சொன்ன

ஶ்ராத்த போஜநத்திற்குத் தகுந்த ப்ராம்ஹணர்களேயும் தகாத ப்ராம்ஹணர்களேயுஞ் சொல்லி, 226 - வது ஶ்லோகத்தில் மேற் சொன்ன ஶ்ராத்தங்களே அபராண்ஹகாலத்தில் துவக்கி நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ம்ருதிசந்த்ரிகையில் ஶ்ராத்த காண்டத்தில், போதாயந காத்யாயநர்களுடைய வசநங்களினாலும், தன் வாக்யங்களினாலும், ஸங்க்ரம நிமித்தகமாகிய ஶ்ராத்தங்களே ஆமத்தாலேயே செய்யவேண்டுமென்று தீர்மானித்து, மேற்சொன்ன ஆமஶ்ராத்தத்தை நடத்தக் காலஞ் சொல்லத்தொடங்கி, 'சூத்ரன் செய்யவேண்டிய எல்லா ஶ்ராத்தங்களேயும் ஆமத்தாலேயே செய்யவேண்டும்; த்விஜன் செய்யவேண்டிய ஶ்ராத்தங்களே அந்நத்தாலேயே செய்யவேண்டும்; சிலநிமித்தங்களில் ஆமமாகிற ப்ரதிநிதியினாலேயே செய்ய வேண்டும்' என்றும், அந்த ப்ரதிநிதிக்கு முக்யத்தின் காலமே காலமென்று ஆபஸ்தம்பர் சொல்லி யிருக்கிறாரென்றும் சொல்லி, அந்த ஶ்ராத்தத்தை ஶ்ராத்தத்திற்கு அங்கமான திலதர்ப்பணத்தைச் செய்து பிறகு செய்யவேண்டுமென்றும், அந்த அங்கமான திலதர்ப்பணத்தை அபராண்ஹத்தில் தான் செய்யவேண்டுமாகையால் அதை முன்செய்து பிறகு செய்யவேண்டிய ஆமஶ்ராத்தத்திற்கு அபராண்ஹகாலத்தைத்தவிர, வேறுகாலம் சொல்ல முடியாதென்றும் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது.

பின்னும், ப்ராம்ஹணனுக்கு, அந்ந ஶ்ராத்தம் நியதம்; ஆமஶ்ராத்தமோ ப்ரதிநிதியாய்க் காலவிஶேஷத்தில் அநியதமாக ப்ராப்தம். இவ்விரண்டுக்கும் சேர்த்து, ஓர் அபராண்ஹகாலத்தை விதித்தால் நித்யாநித்ய ஸம்யோகவிரோதம் வருமென்று ஆக்ஷேபித்து அவ்வாறு விதிக்கப்படவில்லே. நித்யத்திற்குத்தான் காலத்தை விதித்தது. ப்ரதிநிதிக்குக் காலம் விதிக்கவேண்டியதில்லே. முக்யஸ்தாநத்தில் ப்ரதிநிதி வந்தபடியால், முக்யத்தின் காலமே அதிதேசத்தால் ப்ரதிநிதிக்கு வந்துவிடுமென்று ஸமாதாநம் செய்யப்பட் டிருக்கிறது.

பின்னும், திலோதகதாநம் ஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியாக ரிஷிகளால் எடுக்கப்படாதபடியால், அது ப்ரதிநிதியாகமாட்டாது. யாராலாவது ப்ரதிநிதியாகச் சொல்லப்பட்டிருந்தாலும், மேற் சொன்ன ந்யாயங்களால் அந்தத் தர்ப்பணத்தையும் அபராண்ஹ காலத்தில்தான் செய்யவேண்டும்.

ஒரு முக்யத்திற்கு அநேக ப்ரதிநிதிக ளிருந்தாலும், ப்ரதிநிதியைச் செய்யவேண்டுமென்று சொன்னால் மாத்திரம் இஷ்டமான ஏதாவது ஒரு ப்ரதிநிதியைச் சக்திக்குத் தகுந்தபடி செய்யக்கூடும். ஒரு ப்ரதிநிதியைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்குமிடத்தில் மற்றொரு ப்ரதிநிதியை எடுத்துக்கொள்ள ந்யாயமில்லை. ஆகையால், ப்ரக்ருத ஸங்க்ரமண விஷயத்தில் ஶ்ராத்தத்திற்கு ப்ரதிநிதியான ஆமஶ்ராத்தத்தை அபராண்ஹத்தில் அங்கமான திலதர்ப்பணத்தைச் செய்து பிறகு செய்யவேண்டும்.

பக்ஷாந்தரத்தை அநுஸரித்து ப்ரதிநிதியாகத் திலதர்ப்பணத்தைச் செய்தாலும், மேற்சொன்ன ந்யாயங்களால் அபராண்ஹத்திலேயே அதைச் செய்யவேண்டும்.

மேற் சொல்லியிருக்கிற விஷயங்களுக்கு ப்ரமாணமான வைதிக ஸார்வ பௌமருடைய ஸூக்தீ விலோசநம் 11 - வது கண்டத்திலிருக்கிற வசநங்களும் வாக்யங்களும் :

போதாயந: - ஸங்க்ரமே [illegible] விஜா[illegible] ப்ராஹ்ணே வா [illegible]
ஜந்மநி । ஶ்ராத்தம் ஸங்க்ரம[illegible] த்விஜ[illegible] ॥

காத்யாயந: - ஶ்ராத்த[illegible] ஆமேந வா [illegible] ஜந்மநி । ஶ்ராத்தம் [illegible] ஸங்க்ரமே ॥

த்விஜாந்[illegible] ஸங்க்ரம[illegible] ஶ்ராத்த[illegible].

அத: ஸங்க்ராந்தி[illegible] ஶ்ராத்தம் [illegible].

அத: - ஸங்க்ராந்தி[illegible] த்விஜாந்[illegible] ஶ்ராத்தம் [illegible].

ஶ்ரௌதஸார்வபௌமர். 3 - வது. பாதம் ...
52 - வது. ஸூக்தம் ...
[illegible]

[illegible]

திருக்குடந்தை
20-6-1913.

பெருகவாழ்ந்தான்
மஹாமஹோபாத்யாயர்.

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# 𑌶𑍍𑌰𑍀 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌮𑍍.

𑌸𑍍𑌵𑌾𑌦𑌯𑌨𑍍𑌨𑌿𑌹 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌤𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑍍 ॥
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥

---

𑌨𑌮𑍋𑌽𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌰𑌾𑌶𑌯𑍇 ।
𑌨𑌾𑌥𑌾𑌯 𑌮𑍁𑌨𑌯𑍇𑌽𑌗𑌾𑌧𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌿𑌨𑍍𑌧𑌵𑍇 ॥ க.

---

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃.

ஸ்ரீ வேதாந்தத்தின் ரஹஸ்யமாயும் த்வயமென்று சொல்லப்படும் மஹா மந்த்ரத்தினுடைய அர்த்தம் அடங்கியதாயுமுள்ள ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்யக் கருதி, ஸ்ரீ ஆளவந்தார், முதலில் ப்ரக்ருதமான ஸ்தோத்ரம் செய்வதற்கு உபயுக்தமாகிற தத்வஜ்ஞானத்திற்குக் காரணமாகும் தமது ஆசார்யர்களை மிகுந்த நன்றியறிவுடன் ஐந்து ஶ்லோகங்களால் நமஸ்கரிக்கிறார். அந்த ஐந்து ஶ்லோகங்களுள் முதல் மூன்று, ஸ்ரீ ஆளவந்தாருடைய ஆசார்யருக்கும் ஆசார்யராகிற நாதமுநிகளைக் குறித்துச் செய்யப்படும் ப்ரணாமத்தைச் சொல்லுகின்றன. ஸ்ரீநாதமுநிகளுடைய ஸம்பந்தத்தாலே ஸ்ரீ ஆளவந்தாருக்கு ஸதாசார்ய கடாக்ஷம் முதலியவை கிடைத்தன என்பது ப்ரஸித்தம்.

**1**. இந்த ஶ்லோகத்தில், ஸ்ரீ நாதமுநிகளைப் பகவானுடைய பரத்வத்தை அநுபவிப்பதனாலுண்டாகும் பக்தியால் நிறைந்தவராக த்யாநம் செய்துகொண்டு அவரை ப்ரணாமம் செய்கிறார். ‘𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌰𑌾𑌶𑌯𑍇 𑌅𑌗𑌾𑌧𑌭𑌗

வஹ்க்திஸிம்யவெ நாயாய ஶுநயெ நமஃ' என்று அந்வயம். 'ஜ்ஞாநம் வைராக்யம் இவைகளால் நிறைந்தும், பக்தியாலும் நிறைந்துமுள்ள ஸ்ரீ நாதமுநிகளுக்கு நமஸ்காரம்' என்பது இந்த ஸ்லோகத்தின் கருத்து. இதில் 'ஜ்ஞாநத்தாலும் வைராக்யத்தாலும் நிறைந்தும், பக்தியாலும் நிறைந்தும்' என்று ஜ்ஞாந வைராக்யங்களை ஒன்றுசேர்த்துப் பக்தியைத் தனிமையாக உபாதாநம் செய்ததன் தாத்பர்யமாவது - இம்மூன்று குணங்களும் முமுக்ஷுக்களுக்கு ப்ரதாநங்களாக இருக்கையிலும் பக்தி யென்பது அவைகளுள் அத்யந்தம் ப்ரதாநம் என்பது தான். தவிரவும், ஜ்ஞாந வைராக்யங்கள் பக்திக்கு ஸாதகங்கள் என்றும், பக்தி ஜ்ஞாந வைராக்யங்களாலே ஸாத்ய மென்றும், அப்படிப்பட்ட பக்தியினுல் மாத்திரம் ஸ்ரீமந் நாராயணன் அடையத்தகுந்தவனே தவிர மற்றைக் கர்ம ஸமுச்சயம் வாக்யார்த்த ஜ்ஞாநம் முதலியவைகளால் அடையத்தகாதவ னென்றும் ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹத்தின் முதல் ஸ்லோகத்தில் ஸ்ரீ ஆளவந்தாராற் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தம் இவ்விடத்திலும் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. "ஸ்யஶூ ஜ்ஞாநவெராஹ்ய ஸாய்ய ஹக்த்யெகமொவரஃ."

ஜ்ஞாநம் - எந்த ஜ்ஞாநத்தால் மோக்ஷம் லப்யமாகுமோ, எதனுல் நிர்துஷ்டமான பரப்ரஹ்மத்தை அறியலாமோ, அது தான் ஜ்ஞாநம். "ஸா வித்யா யா விஶுக்தயெ", "ஸம்ஜ்ஞாயதெ யெந தத்ஸ்தொஷம்" இத்யாதியான வாக்யங்கள் இதற்கு ப்ரமாணம். பரஸேஷதைகரஸமாகிய யதாவஸ்தித ஆத்ம விஷயமான ஜ்ஞாநமே இந்த ஜ்ஞாநமாகும். இப்படிப்பட்ட ஜ்ஞாநம் நிறைந்துள்ள ஆசார்யனே ஆஸ்ரயிக்கத்தகுந்தவன் என்றும் த்யோதிப்பிக்கப்படுகிறது.

வைராக்யம் - பரமாத்மா ஒன்று நீங்கலாக மற்றை ஸர்வபதார்த்தங்களிலும் உள்ள விரக்தியே வைராக்யம்; அதாவது - அல்பமாகவும் அஸ்திரமாகவும் இருக்கும் ஸ்வர்க்கம் முதலியவைகளிலும் ஸ்வாத்மாநுபவ மாத்ரத்திலும் ஸ்ப்ருஹை யற்று இருக்

குந் தன்மை. "வாஸோதநி யோஸகோ விஸகோஸவாஸோதநி" என்று முமுக்ஷுவினுடைய ஸ்வபாவம் ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிறது.

பக்தி - மஹநீயர்களாக இருக்குமவர்களிடம் செய்யப்படும் ப்ரீதியே பக்தியென்று சொல்லப்படும். "ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே" என்று ஸாமாந்யமாக ஸ்நேஹத்தை முன்னிட்டுச் செய்யப்படும் அநுத்யாநத்திற்குப் பக்தி யென்று பெயராகச் சொல்லப்பட்டிருந்த போதிலும், பூஜ்யர் கள்விஷயத்தில்தான் இது வழங்கிவருகின்றது. வேதநம் உபாஸநம் த்யாநம் முதலிய ஶப்தங்கள் இந்தப் பக்திக்குப் பர்யாய ஶப்தங்களாக அத்யாத்ம ஶாஸ்த்ரங்களில் ப்ரயோகம் செய்யப் பட்டுவருகின்றன.

'ஜ்ஞாந வைராக்யங்களுடைய ராஶி' என்றும், 'பக்திக்கு ஸிந்து' என்றும் சொன்னதன் தாத்பர்யம் - ஜ்ஞாநாதிகள் அக்ஷயங்களாக நிற்கின்றன என்பதையும், பக்தி ஸமுத்ரம்போல அபாரமாகவும் அஶோஷ்யமாகவும் நிறைந்திருக்கிறது என்பதை யும் காண்பிக்க வேண்டும் என்பதே.

'ஜ்ஞாநம்' 'வைராக்யம்' இந்த இரண்டு பதங்களுக்கும், 'அசிந்த்யம்' 'அத்புதம்' 'அக்லிஷ்டம்' என்று மூன்று விஶேஷணங்கள் இருக்கின்றன. ஸ்ரீ நாதமுநிகளுடைய ஜ்ஞாந வைராக் யங்கள் இப்படிப்பட்டவை யென்று பரிச்சேதிக்கக் கூடாதவை யாதலால் அசிந்த்யங்கள், லோகோத்தரங்க ளானபடியால் ஆஶ் சர்யகரங்கள், ப்ராசீந ஸுக்ருத விஶேஷத்தாலும் ஆசார்ய ப்ர ஸாதத்தாலும் ஸ்வயத்ந மின்றிக்கே கிடைத்தவை யாதலால் அக் லிஷ்டங்கள் என்பது இந்த விஶேஷணங்களின் தாத்பர்யம்.

பக்தியைச் சொல்லுமிடத்தில் 'பகவத் பக்தி' என்றும், அது 'அகாதம்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பக் திக்கு ஸமஸ்த கல்யாண குணாகரனாகவும் ஹேயகுண ரஹிதனா கவுமுள்ள ஸர்வஶேஷியான பகவானே யோக்யனென்றும், இந்தப்

> தஸ்மை நமோ மதுஜிதங்க்ரி ஸரோஜதத்த்வ
> ஜ்ஞாநாநுராக மஹிமாதிஶயாந்தஸீம்நே ।
> நாதாய நாதமுநயேऽத்ர பரத்ர சாபி
> நித்யம் யதீயசரணௌ ஶரணம் மதீயம் ॥ ௨.

---

பக்தியானது எவ்வகையிலும் அபேக்ஷாப்ய மென்றும் இதனல் ஸூசிப்பிக்கப்படுகிறது.

'நாதாய முநயே'-நாதமுநிகளின் பொருட்டு. நமக்கு யாசநீயராகவும், ஸ்வாமியாகவு மிருக்கும் தன்மையும், ப்ரக்ருஷ்டமான மநந ஸ்வபாவத்தை உடைத்தாயிருக்கும் தன்மையும் ஸ்ரீ நாதமுநிகளிடம் நிறைந்திருக்கின்றன என்பதை இந்தப் பதங்கள் த்யோதிப்பிக்கின்றன.

நம: - நமஸ்காரம். இந்த ஶப்தம், ப்ரணிபதநத்தை முன்னிட்டிருக்கும் ஆத்ம நிவேதநத்தைக் காண்பிக்கிறது. "நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயாத்மநிவேதநம் - க்ருதக்ருத்ய: ஸதாऽ விஶ்ராந்தா நஶ்யதே தந்நமாம்யஹம்" என்று ஈஶ்வர ஸம்ஹிதையில் படிக்கப்பட்டிருக்கிறது. ஆசார்ய வந்தநத்தை முன்னிட்டுச் செய்யப்படும் பகவத் வந்தநமே அத்யந்தம் ஸாதுவானதால், பகவத் வந்தநரூபமான இந்த ஸ்தோத்ரத்தைச் செய்ய ஆரம்பிக்கும் ஸ்ரீ ஆளவந்தார் பாகவத வந்தநமாகிற இந்த ஆசார்ய வந்தநத்தைச் செய்கிறார். இதைத் தாமே செய்வது போதுமானலும், மற்றவர்களுடைய ப்ரதிபோதநத்தின் பொருட்டு இந்த ப்ரணமம் க்ரந்தத்தில் நிவேஶிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ நாதமுநிகளிடம் ஸ்ரீ ஆளவந்தார் இம்மாதிரியான தாஸ்யம் பூண்டதற்குக் காரணம் ஸ்ரீ நாதமுநிகளுடைய திருக்கல்யாணகுண பூர்த்தியே தவிர வேறு ஒன்று மன்று என்பதை நன்றாக விளக்கிக் காட்டுவதற்காகத்தான் இந்த முதல் ஶ்லோகத்தில் ஸ்ரீ ஆளவந்தார் கேவல நமஸ்காரத்தைச் செய்யாமல் தமது ஆசார்யர்களுடைய குணகணங்களை அநுஸந்தாநம் செய்துகொண்டு நமஸ்கரிக்கிறார்.

**2.** இப்படி முதல்ஶ்லோகத்தால், ஸ்ரீ நாதமுநிகளைப் பகவத் பரத்வாநுபவத்தினல் பக்திபரிபூர்ணராய் இருப்பதாக அநுஸந்

த்து ப்ரணாமம் செய்து விட்டு, ஸ்ரீ ஆளவந்தார் மறுபடியும் அவரையே பகவானுடைய ஸௌலப்ய அநுபவத்தினால் உண்டாகும் ஸ்நேஹ பரிபூர்ணராக அநுஸந்தித்து நமஸ்கரிக்கிறார். 'பக்தி ஸிந்து' என்று முதல் ஶ்லோகத்தில் வ்யவஹரித்து விட்டு 'அநுராக ஸீமா' என்று இந்த ஶ்லோகத்தில் வ்யவஹரித்திருப்பதே இந்த விபாகத்திற்கு முக்யமான நியாமகம். ஸேவ்யனிடத்தில் பரத்வாநுஸந்தாநம் செய்யும்பொழுது பக்தியும், ஸௌலப்யாநுஸந்தாநஞ் செய்யும்பொழுது அநுராகமும் ஜநிக்கின்றன என்பது ப்ரஸித்தம். "ஸௌஹொ ஒ௨ வாஒ௨ா ராஜஂ ஸ்வயி நித்யம் வ்ருதிஷ்டித: - ஹக்ஷ்ரு நியதா வீர ஹாவொ நாநந்து மஹதி" என்னுமிடத்தில் இம்மாதிரியான விபாகத்தைக் காணலாம். அவதாரத்தை த்யோதிப்பிக்கும் 'மதுஜித்' என்கிற ஶப்தத்தை இங்கு ப்ரயோகம் செய்திருப்பதும், அவதாரத்திற்கு ஹேதுவாக இருக்கும் ஸௌலப்ய குணமே இவ்விடத்தில் விவக்ஷிதம் என்பதைக் காண்பிக்கிறது.

அந்வயம் - ௨ய ஜிஃஂ வி ஸொராஜதத்வஜ்ஞாநாநுராம ௨ஹிஜாதிஶயாஸவீ௨ தவெஷ நாயாய நாய ௨நமெ ந௨:; யதீய வரணள க்ஷத்ரு வாரத்ரு வாவி நித்யம் ௨தீயஂ ஶரணம். அதாவது - மதுஜித்தாகிற பகவானுடைய பாதாரவிந்த விஷயகமான தத்வஜ்ஞாநம், அந்தப் பாதாரவிந்த விஷயகமான அநுராகம் ஆக இவை இரண்டின் மஹிமையினுடைய ப்ரகர்ஷத்திற்குப் பரமாவதி பூதராகவும், மிகப்ரஸித்தராகவும், ஸர்வ ப்ரகாரத்தாலும் அஸ்மத் ஸ்வாமியாகவுமுள்ள ஸ்ரீமந் நாதமுநிகளுக்கு நமஸ்காரம். அந்த மஹாநுடைய சரணாரவிந்தங்கள் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஸர்வகாலத்திலும் எனக்கு ஶரணமாகின்றன.

௨ய ஜிசு - மது என்னும் அஸுரனை ஜயித்தவன். ஸாதுக்களுடைய பரித்ராணத்திற்காகவும் மதுவைப்போன்ற துஷ்க்ரு

த்துக்களுடைய விநாஶத்திற்காகவும் ப்ரதியுகமும் ஸம்பவிக்கும் ஶீலத்தை உடையவன் என்று தாத்பர்யம். கீழ்ச்சொல்லியிருப்பதுபோலவே, இதனுல் பகவானுடைய ஸௌலப்யகுணம் த்யோதிப்பிக்கப்படுகிறது.

அங்க்ரிஸரோஜம் - பாதாரவிந்தம். 'பகவத் விஷயகமான தத்வஜ்ஞாநம்' என்று சொன்னுல் போதாது என்று எண்ணி, 'பகவானுடைய பாதாரவிந்த விஷயகமான தத்வஜ்ஞாநம்' என்று சொன்னதன் தாத்பர்யம், ஶேஷபூதர்களான நமக்குப் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் அத்யந்தம் உத்தேஶ்யமான அம்ஶம் அவனது திருவடிகளே என்பதுதான்.

தத்த்வஜ்ஞானம் - 'பகவாந் பிறப்பு இறப்பு அற்றவனுக இருக்கையிலும் நமது க்ஷேமத்தை உத்தேஶித்தே பஹுப்ரகாரமாக அவதரிக்கிறுன்; அவனுடைய அவதாரங்களும் சேஷ்டிதங்களும் திவ்யங்கள்' இத்யாதியான அவனது அவதார ரஹஸ்ய ஜ்ஞாநமே இவ்விடத்தில் தத்வஜ்ஞாநமென்று சொல்லப்படுகிறது.

அநுராக: - பகவாந் அவதரித்து நமது த்ருஷ்டி கோசரனுக இந்த விபூதியில் எழுந்தருளியிருந்தபொழுது அவனிடத்தில் ப்ரகாஶித்துநின்ற குணவிஶேஷங்களைப் பார்த்து அவைகளால் ஆகர்ஷிக்கப்பட்டு அவனிடத்தில் நாம் செய்யும் ஸ்நேஹமே அநுராகம்.

அப்படிப்பட்ட ஜ்ஞாந ஸ்நேஹங்களின் மஹிமாதிஶயத்திற்கு ஸ்ரீ நாதமுநிகள் எல்லைநிலமாக நிற்கிறுர்; அதாவது - இவருடைய ஜ்ஞாநத்தையும் ஸ்நேஹத்தையும் பார்க்குமளவில் மற்ற யோகிகள் எல்லாரும் இவருக்குத் தாழ்ந்தவர்கள் என்றே தோன்றும் என்று தாத்பர்யம்.

அத்ர பரத்ர சாபி - 'முக்திக்குப் பூர்வாவஸ்தையில் ஆசார்யன் ஜ்ஞாந பக்த்யாதிகளை உத்பாதநம் செய்கிறுன் என்கிற காரணத்தால் அவன் அந்த அவஸ்தையில் ஶரணமாவது உபபந்நம்; முக்தியடைந்த பிறகு அவன் எப்படி ஶரணமாவான்'? என்று

பூயோ நமோऽபரிமிதாச்யுதபக்திதத்வ
ஜ்ஞாநாம்ருதாப்திபரிவாஹஶுபைர் வசோபி: ।
லோகேऽவதீர்ணபரமார்த்தஸமக்ரபக்தி
யோகாய நாதமுநயே யமிநாம் வராய ॥ ௩.

---

கேட்டால், அப்பொழுதும் அவன் நமக்கு ஶரணமே என்பதை 'பரத்ர சாபி' என்பதில் இருக்கும் 'ச அபி' என்னும் பதங்கள் காண்பிக்கின்றன. முக்தி தஶையிலும், பூர்வம் அவனால் நமக்குச்செய்யப்பட்டுள்ள மஹோபகாரங்களை அநுஸந்தித்து நாம் க்ருதஜ்ஞதையை முன்னிட்டு அவனிடம் விஶேஷ ப்ரதிபத்தி செய்வது உபபந்நமாதலால், அப்பொழுதும் அவன் ஶரணமாவது அஸம்பவமாகாது. "ஶௌரிரேவ பரம் ப்ரஹ்ம ஶௌரிரேவ பரா கதி:" இத்யாதியான வாக்யங்கள் இதற்கு ப்ரமாணம்.

3. இவ்விதமாக ஸ்ரீ நாதமுநிகளைப் பக்திபரிபூர்ணராகவும் ஸ்நேஹ பரிபூர்ணராகவும் பாவித்து ப்ரணாமம் செய்துவிட்டு, மறுபடியும் அவரையே பரமௌதார்ய விஶிஷ்டராகப் பாவித்து நமஸ்கரிக்கிறார். 'ஜகதாசார்யராக இருக்குமவர் தாம் கேவலம் பகவத் குணாநுபவம் செய்வதுடன் த்ருப்தராக இருக்கமாட்டார்; தாம் அநுபவிப்பதுபோலவே லோகம்முழுவதும் அநுபவித்துப் பரமமான ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டும் என்று எண்ணி அதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடுவார்; இவரும் அப்படிப்பட்ட பரமோபகாரத்தைச் செய்திருக்கிறபடியால் பரமௌதார்ய விஶிஷ்டராகிறார்' என்று இந்த ஶ்லோகத்தில் அநுஸந்தித்து க்ருதஜ்ஞதை தாங்கமாட்டாமல் வாய்விட்டுக் கதறி அந்தப் பரமோபகாரகனை நமஸ்கரிக்கிறார். 'ப்ரஹ்மாநுபவரூபமான ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியது பக்தியோகம்; அந்த யோகத்தை இந்த லோகத்தில் அவதரிப்பித்தது ஸ்ரீ நாதமுநிகள்' என்பது ப்ரஸித்தம்.

'அபரிமிதாச்யுதபக்திதத்வஜ்ஞாநாம்ருதாப்திபரிவாஹஶுபைர் வசோபி: லோகே அவதீர்ண பரமார்த்த ஸமக்ரபக்தியோகாய யமிநாம் வராய நாதமுநயே பூயோ நம:'

என்பது அந்வயம். 'அச்யுதனிடத்தில் அளவற்ற பக்தி, அவன் விஷயமான அளவற்ற தத்வஜ்ஞாநம், இவையே ஒரு பெரிய அம்ருத ஸமுத்ரமாகி அது நிரம்பி அதிகாம்ஶம் ப்ரவஹித்தாற் போல இருக்கின்றன, ஸ்ரீ நாதமுநிகளுடைய ஸ்வரூபமான வாக்யங்கள். அப்படிப்பட்ட வாக்யங்களால், பரமார்த்தமும் பரிபூர்ணமுமாகிற பக்தியோகத்தை இந்த லோகத்தில் அவதரிப்பித்த மஹாயோகி ஶ்ரேஷ்டரான ஸ்ரீ நாதமுநிகளுக்கு மறுபடியும் நமஸ்காரம்' என்பது அர்த்தம்.

𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌃 - 𑌨 𑌚𑍍𑌯𑍁𑌤𑌃, நழுவாதவன்; அதாவது - ஆஸ்ரிதர்களைக் காப்பாற்றுவதாகிற ஒரு வ்ரதத்திலிருந்து ஒரு பொழுதும் நழுவாதவன் என்று தாத்பர்யம். "𑌏𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌮𑌮" என்றுகதறியிருக்கும் ஸ்ரீ பகவான்தான் அப்படிப்பட்ட அச்யுதனுவான். எந்தப் பகவத் ஸம்பத்தமான பக்தியோகத்தை ஸ்ரீ நாதமுநிகள் அவதரிப்பித்திருக்கிறாரோ, அந்தப் பகவான் 'ஆஸ்ரித ஸம்ரக்ஷணம்' என்னும் பெரியதொரு வ்ரதத்தைப் பூண்டவன்; 'ஆகையால், நாம் அவனை ஆஸ்ரயித்தால் நமக்கு ரக்ஷணம் நிஶ்சயம் கிடைக்கும்' என்கிற விஸ்வாஸத்தை நமக்கு ஜநிப்பிக்கிறது இந்த அச்யுத ஶப்தம். அல்லது, '𑌚𑍍𑌯𑌵𑌂𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃' அதாவது - அவனை அடைந்தவர் அவனிடத்திலிருந்து ஒருபொழுதும் நழுவார் என்றும் இந்தப் பதத்திற்கு அர்த்தம் சொல்லலாம். அல்லது 'ஜ்ஞாநம் பலம் முதலிய ஷாட்குண்யத்திலிருந்து நழுவாதவன், எப்பொழுதும் ஷாட்குண்ய பரிபூர்ணனாக இருக்கிறான்' என்கிற அர்த்தத்தையும் இந்த அச்யுத ஶப்தத்திற்குச் சொல்வது உண்டு.

𑌅𑌮𑍃𑌤𑌾𑌬𑍍𑌧𑌿 - அம்ருத ஸமுத்ரம். பகவத் ஸம்பத்தமான பக்தி ஜ்ஞாநங்களை அம்ருத ஸமுத்ரம்போல நிரூபித்ததன் தாத்பர்யம் - அதுபோல இதுவும் ஸஞ்ஜீவநம் ஸ்வயம்ப்ரயோஜநம் அக்ஷயம் என்பதை வ்யஞ்ஜிப்பதுதான்.

𑌪𑌰𑍀𑌵𑌾𑌹𑌃 - கடைப்போக்கு. தடாகாதிகள் நிறைந்துவிட்டால் அவைகளை ரக்ஷிப்பதற்கு வெட்டி விடப்படும் கடைப்

போக்குப்போல இருக்கின்றனவாம் ஸ்ரீ நாதமுனிகளுடைய திவ்ய ஸூக்திகள். கைதவமின்றிக்கே ஹார்த்தமாக ப்ரவஹித்தன என்பதையும், அப்படி ப்ரவஹிக்காமல் உள்ளே அடங்கிநிற்பது ஶக்யமில்லை என்பதையும் ஸூசிப்பிக்கிறது இந்த ஶப்தம்.

ஶுபை: - ப்ரஸந்நமாயும் மதுரமாயும் ஶீதளமாயும் இருக்கின்றன அந்தத் திவ்ய ஸூக்திகள் என்று தாத்பர்யம்.

லோகே - லோகத்தில். 'நமக்கு ஆத்யந்திகமான ஶ்ரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடிய பரமோபகாரத்தை யார் செய்யப்போகிறார்? என்று எதிர் பாராமலும் அதற்கு உரிய ஜ்ஞாநமின்றிக்கே விஷயப்ரவணர்களாகவும் பகவத்விமுகர்களாகவுமுள்ள ஜநங்களால் நிறைந்திருக்கும் இந்த லோகத்திலன்றோ ஸ்ரீ நாதமுனிகள் பக்தியோகத்தை அவதரிப்பித்தது? அவருடைய ஔதார்யமே ஔதார்யம்!' என்று கருத்து.

அவதீர்ண - அவதரிப்பிக்கப்பட்ட. ப்ரகாஶிப்பிக்கப்பட்ட என்று சொல்லாமல் அவதரிப்பிக்கப்பட்ட என்று சொன்னதன் தாத்பர்யம் - பரமபதத்திலிருந்து ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸுக்காகப் பகவான் திருவவதரிப்பதுபோல, ஸ்ரீ நாதமுனிகளிடமிருந்து இந்தப் பக்தியோகமும் ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸுக்காக அவதரித்தது என்பதைக் காண்பிக்கவேண்டு மென்பதுதான்.

பரமார்த்த ஸமக்ர - பரமார்த்த மென்றால் ஸ்வயமே ப்ரயோஜநமா யுள்ள என்று அர்த்தம்; அதாவது - பக்தி யோகாநுஷ்டாநமே பரம ப்ரயோஜநமாகு மென்றபடி. ஸமக்ர மென்றால் பரிபூர்ணமான என்று அர்த்தம்; ஸ்ரீ நாதமுனிகளால் அவதரிப்பிக்கப்பட்ட பக்தியோகம் அவ்யவஹிதமாகப் பலத்தை ஸாதித்துக் கொடுக்குமளவு பூர்ணமாக இருக்கிறது என்று கருத்து.

பக்தியோக: - பக்திஶ்சாஸௌ யோகஶ்ச, பக்தியாகிற யோகம். ப்ரீதி ரூபத்வதை அடைந்திருக்கும் த்யாநம் அல்லது உபாயம். 'யோகம்' என்னும் ஶப்தத்திற்கு - 'த்யாநம்', 'உபாயம்' என்னும் இரண்டு அர்த்தம் உண்டு.

தகௌவஙு யஸ்ஷிஒவிதீஶ்ஶுரஶு தஹ்ஸாவ

ஹொமாவவமஙுதஷஊவாயமதீஶஊஷாஃ: ।

ஸஂஷஶஷூயநூ்ரஶ்லீத வஊராணாரதூஂ

தஜெஹெ நஜொ ஊநிவராய வராஶராய ॥ ௬.

யதிநாம் வராய - யோகிகளுக்குள் ஶ்ரேஷ்டர்; 'பகவானிடத்திலேயே நிவேஶிக்கப்பட்ட வாங்மநஃகர்மாக்களாகிற கரண த்ரயங்களை யுடைய யோகிகளுக்குள்ளே ஸ்ரீ நாதமுநிகள் ஶ்ரேஷ்டர் என்று கருத்து. 'எவன் மிக்க ஶ்ரத்தாளுவாய் என்னிடத்திற் செலுத்தப்பட்ட அந்தஃகரணத்துடன் என்னைப் பஜிக்கிருனே, அவன்தான் யோகிகளுக்குள் ஶ்ரேஷ்டன்' என்கிற அர்த்தமுள்ள "யொமிநாஒவி ஸவெஷாஂ ஒஹுதெநாஜ ராதூநா - ஶ்ரூஷாவாநு ஹஜதெ யொ ஒாஂ ஸ மெ யுக்தஜொ ஒதஃ" என்னும் பகவத் வாக்யப்படி இவர் யோகி ஶ்ரேஷ்டர் என்று ஆகிறது.

4. ஸ்ரீ ஆளவந்தார், இவ்வாறு மூன்று ஶ்லோகங்களால் தமது ப்ராசார்யராகிற ஸ்ரீ நாதமுநிகளை நமஸ்கரித்து விட்டு, ப்ரபந்தங்களை அருளிச்செய்து ஜகத்துக்குப் பரம்பரையாக உபகரித்திருக்கும் மஹான்களை நமஸ்கரிக்க இச்சையுள்ளவராய், அவர்களுள் தத்வத்ரயாதிகளின் விவேகத்தை ஸுலபத்தில் ஸாத்யமாகச் செய்யும் ஸ்ரீ விஷ்ணுபுராண மென்னும் க்ரந்தத்தைச் செய்தருளிய ஸ்ரீ பராஶரரை இந்த ஶ்லோகத்தால் நமஸ்கரிக்கிருர். ஸ்ரீபாரதாதிகளை நிர்மித்திருக்கும் ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷி பரப்ருதிகளை விட்டு ஸ்ரீ பராஶரரை க்ரஹித்ததற்குக் காரணம் என்னவென்ருல், ஸ்ரீ பாரதாதிகள் அதிவிஸ்தாரமாகவும் அதி கஹநமாகவும் இருப்பதால் அவைகளில் தத்வ த்ரயாதிகளுடைய விவேகம் ஸ்ரீ விஷ்ணுபுராணத்திற்போல அவ்வளவு ஸுலப ஸாத்யமாகாது என்பதுதான்-

"ய உஷாரஃ விஒவிதீஶ்ஶுரதஹ்ஸாவ ஹொமாவவமஙு தஷஊவாயமதீஃ தவெதூந ஸஂஷஶஷூயநு வஊராண ரதூஂ

[illegible]'' - மஹத்தான ஔதார்யகுணங்கள் நிறைந்துள்ள ஸ்ரீ பராஶர மஹர்ஷி, சேதநன் அசேதநன் ஈஸ்வரன் என்று மூவகைப்படும் தத்வ த்ரயங்கள், அவர்களுடைய ஸாதர்ம்யரூபங்களாகிற ஸ்வபாவம், போகமென்னும் ஸ்வர்க்காதி ஸுகாநுபவம், அபவர்க்கமென்னும் மோக்ஷம், இந்தப் போகாபவர்க்கங்களை ஸாதித்துக் கொடுக்கும் உபாயங்கள், இந்தப் போகாபவர்க்க ஸம்பந்தமான கதிகள் இவை முதலிய விஷயங்களை ஜகத்திற்குத் தெளிவாக விளக்கும் பொருட்டுப் புராணங்களுள் ஶ்ரேஷ்டமாயுள்ள ஸ்ரீ விஷ்ணு புராணத்தைச் செய்திருக்கிறார். அப்படிப்பட்ட ஸ்ரீ பராஶர மஹர்ஷிக்கு நமஸ்காரம்.

[illegible]-ஔதார்யகுணம் பொருந்திய. தாம் ஒரு ப்ரத்யுபகாரத்தையும் அபேக்ஷியாமலே ஜகத்திற்கு மஹோபகாரத்தைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவர். அஜ்ஞாநமாகிற அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கும் ஜகத்திற்குத் தத்வஜ்ஞாநமாகிற மஹாநிதியைக் கொடுப்பதைவிடச் சிறந்த உபகாரமும் உண்டோ? ''[illegible]'' என்கிறபடியே ஸமக்ரமான பூப்ரதாநத்தைக் காட்டிலும் மிகப்பல மடங்கு சிறந்ததன்றோ இந்த ஜ்ஞாந ப்ரதாநம்? அப்படிப்பட்ட மஹோபகாரத்தை ப்ரத்யுபகார லேஶத்தையும் அபேக்ஷியாமல் செய்திருப்பவராதலால், இவர் மஹோதாரர் என்று கொண்டாடப்படுகிறார்.

விசு - சேதந வர்க்கம்; அதாவது - பத்த முக்த ப்ரக்ருதிகள். அவிசு - அசேதநங்கள்; த்ரிகுணம் காலம் முதலியவைகள். [illegible] - தான் நீங்கலாக மற்றைச் சேதநாசேதநங்கள் எல்லாவற்றுக்கும் நியந்தாவாக இருக்கும் புருஷோத்தமன். இந்த மூன்று தத்வங்களைத்தான் 'தத்வத்ரயம்' என்று வ்யவஹரிப்பார்கள். இவைகளுள் முதல் தத்வமாகிற சேதநன் போக்தா, இரண்டாவதாகிற அசேதநம் போக்யம், மூன்றாவதாகிற ஈஸ்வரன் நியந்தா என்று 'போக்த்ரு போக்ய நியந்த்ரு க்ரமம்' என்னும் ஒரு க்ரமமும் வேதாந்திகளாற் சொல்லப்படும்.

தத்ஸ்வபாவா: - இந்த மூன்று தத்வங்களினுடைய ஸ்வபாவங்கள். இவைகளுக்கு ஸாதாரணமான குணங்கள், பரஸ்பரம் பிந்நங்களென்று வ்யவஹரிப்பதற்கு ஹேதுவாகும் வைதர்ம்யங்கள்; இவைகள்தான் அந்தத் தத்வங்களினுடைய ஸ்வபாவங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஸௌக்ய: - ஸ்வர்க்கம் முதலிய ஸுகாநுபவம்; கேவலம் தன்னுடைய ஆத்மாநந்தாநுபவமும் இங்கு விவக்ஷிதம். இந்த ஆத்மாநந்தாநுபவம் நச்வரமானாலும் அதன் ஸ்வபாவம் எவ்வகைப்பட்டது என்று தெரிவிக்கும் பொருட்டே புராணங்களில் அது விவரிக்கப்படுகின்றது. அதை முமுக்ஷுவுக்கு ப்ராப்யமான அம்சமாக க்ரஹிக்கக்கூடாது.

அபவர்க்க: - மோக்ஷம். ஸர்வ கர்ம பந்தங்களும் விட்டு அவித்யை நிஶ்ஶேஷமாக நிவ்ருத்தியாகிப் பரிபூர்ண ப்ரம்ஹத்தை அநுபவிப்பதே மோக்ஷம். அநுபவிப்பதாவது - ஶேஷவ்ருத்தியைச் செய்வதே. முக்தர்களாகியும் சேதநர்கள் பகவானைக் குறித்து ஶேஷ வ்ருத்தியைச் செய்வது உண்டு; ஆனால், அது கர்மாதீநமன்று, ஸ்வச்சந்தமாகச் செய்யப்படும். இந்த மோக்ஷத்தில், சேதநர்களுக்கு இயற்கையாயுள்ள ஜ்ஞாநாதிகள் ப்ரகாஶிக்கின்றனவே தவிர அவை புதிதாக உண்டாக்கப்படவில்லை யென்பதை, "யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாலநாந்மணே: ... ப்ரகாஶ்யதே ந ஜந்யதே நித்யா ஏவாத்மநோ ஹி தே" இத்யாதி வாக்யங்களால் அறியவேணும்.

தது பாயா: - போகாபவர்க்கங்களை ஸாதித்துக் கொடுக்கும் உபாயங்கள். ப்ரவ்ருத்தி லக்ஷணமான தர்மம் போகங்களை ஸாதித்துக் கொடுக்கு மென்றும், நிவ்ருத்தி லக்ஷணமான தர்மம் அபவர்க்கத்தை ஸாதித்துக் கொடுக்கு மென்றும் "ப்ரவ்ருத்தி லக்ஷணம் தர்மம் ப்ரஜாபதிரதாப்ரவீத் - நிவ்ருத்தி லக்ஷணம் தர்மம் ருஷிர்நாராயணோப்ரவீத்" என்று விபாகித்துச் சொல்லும் வாக்யங்களிலிருந்து தெரியவருகிறது. பக்தியோகத்தைத்தான் 'நிவ்ருத்தி தர்மம்' என்பதனால் நாம் அறியவேணும்.

ம திஃ - அந்தப் போகாபவர்க்க ஸம்பத்தமான மார்க்கங்கள். மோக்ஷத்திற்குப் போகும் மார்க்கம் - அர்ச்சிராதி மார்க்க மென்றும், போகத்திற்குக் கொண்டுபோய் விடும் மார்க்கம் - தூமாதி மார்க்க மென்றும் இருவகைப்படு மென்று சொல்லப்பட் டிருக்கிறது. அந்த மார்க்கங்களைத்தான் இங்கு 'கதி' என்னும் ஶப்தம் சொல்லுகின்றது.

இப்படி 'சேதநன்' தொடங்கி 'கதி' வரையிலுமுள்ள எட்டு விஷயங்கள் முதலிய மற்ற விஷயங்களும் இந்த ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

தத்வேந ஸஂஜஶஹயநு - கண்டோக்தியினாலும் அர்த்த ஸித்தியினாலும் விஶதமாக ப்ரகாஶிப்பிக்கும் பொருட்டு. "வெஹா வாவ தாஂ தத்வெதா ஶ்ரஹ்மவிஞாஂ" என்று ஶ்ருதி சொல்லுகிறது போலவே, கீழ்க்கூறப்பட்டுள்ள விஷயங்களை இந்தப்புராணம் யதாவஸ்திதமாகத் தெரிவிக்கின்றது என்று தாத்பர்யம். 'தத்வேந' என்றால் 'யதாவஸ்திதமாக' 'அநாரோபிதமாக' என்று அர்த்தம்.

வுராணரத்நஂ - "ஸமஶ்ஶு வுதிஸமஶ்ஶு" என்கிறபடி ஐந்து லக்ஷணம் பொருந்திய க்ரந்தம். இந்தப் புராணத்துக்கு உள்ள ஏற்றத்தைப் பின்வரும் காரிகையால் ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் வெளியிட்டிருக்கிறார்:— "ஸுதராவஸஂ ஶாநஷஂ ரத்நஂ ஹ்ஸிரஂ ஹொமுஂ வுகாஶகஂ। ஶஹாவஹஂ ஶஂமஷஂ ஶாநுஂ ஸாரக்ஷஂ ஸாமுஹஂ நுணாஂ."

உஷிவராய - பரப்ரஹ்மத்தை எப்பொழுதும் மநநம்செய்யும் ஶீலமுடையவர். வராஶராய - வராஶ் ஶூஶாதீதி வராஶரஃ; அதாவது - எதிரிகளை ப்ரமாண தர்க்கமாகிற பாணங்களால் சேதிக்கிறவர் என்று அர்த்தம். 'முனிவரர்' என்னும் ஶப்தம் - ஸ்வபக்ஷத்தை ஸ்தாபநம் செய்யும் திறமை யுள்ளவர் என்பதையும், 'பராஶரர்' என்னும் ஶப்தம் - பரபக்ஷத்தை ப்ரதிக்ஷேபம் செய்யும் திறமை யுள்ளவர் என்பதையும் ஸூசிப்பிக்கின்றன.

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌕𑍁𑌲𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌲𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥ ௫.

---

5. இந்த ஶ்லோகம், பராங்குஶரான நம்மாழ்வாருக்குச் செய்யப்படும் நமஸ்காரத்தைச் சொல்லுகிறது. இவர் அருளிச்செய்திருக்கும் உபப்ரும்ஹணங்கள் எல்லாருக்கும் உபஜீவ்யங்கள்; இவைகள், பராஶரர் செய்தருளியிருக்கும் ப்ரபந்தத்தைக்காட்டிலும் வேதாந்த ரஹஸ்யத்தை உணர்த்துவதில் அநேக மடங்கு சிறந்தவை; கேவலம் அத்யயநத்தால் இப்பொழுதே பரமாத்மாவினிடத்தில் நிரதிஶயமான ஓர் ஆஹ்லாதத்தை அத்யேதாக்களுக்கு ஜநிப்பிக்கக் கூடியவை. அப்படிப்பட்ட பராங்குஶமுநிக்கு, அவருடைய ப்ரபந்தங்களால்தான் தமக்கு ஸம்யக்ஜ்ஞாநம் கிடைத்தது என்னும் காரணத்தைக்கொண்டு பக்த்யதிஶயத்தால் விஶேஷித்த ப்ரணாமங்களை ஸ்ரீ ஆளவந்தார் இந்த ஶ்லோகத்தால் செய்கிறார்.

"𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃 (𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌂) 𑌸𑌰𑍍𑌵𑌮𑌪𑌿 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌯𑌦𑍇𑌵 (𑌅𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌲𑌂), 𑌤𑌤𑍍 𑌵𑌕𑍁𑌲𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍 𑌨𑌃 𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌃 𑌅𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌲𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿". தாயார் தகப்பனார் யுவதிகள் ஸந்தாநம் ஸம்பத் இன்னும் புருஷார்த்த ஸாதகமாகிற மற்றை வஸ்துக்கள் எல்லாம், என்னுடைய வம்ஶ்யர்கள் எல்லாருக்கும் ஸர்வகாலத்திலும் எந்தத் திருவடிகளோ, அப்படிப்பட்ட, வகுள புஷ்பங்களால் அபிராமமாகவும் ஸ்ரீமத்தாகவுமுள்ள எங்களுடைய ஆதிகுலபதியின் திருவடிகளை ஶிரஸ்ஸால் நமஸ்கரிக்கிறேன்.

"𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍" என்று ஸ்ரீ பகவானைப்பற்றி உபநிஷத் சொல்லுகின்றது. அந்த ஸ்வபாவத்தைப் பாவித்தே, இவ்விடத்தில் ஸ்ரீ ஆளவந்தார் பரா

ங்குண முனிகளைக் கொண்டாடுகிறார். ஜாதா - எப்பொழுதும் ப்ரியத்தையே செய்யும் ஸ்வபாவ முள்ளவள் என்று தாத்பர்யம். தவிரவும், எந்தத் தசையிலும் மஹத்தான கௌரவத்திற்குப் பாத்ரம் தாய். "ஓதிதாயாஜவி ஜாதஸி ஶுஶ்ரூஷா நீத்யா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிதா - அப்படியே ப்ரஸித்தமான கௌரவத்தை உடையவன் தகப்பனும்; எப்பொழுதும் ஹிதத்தைச் செய்யும் ஸ்வபாவமுள்ளவன் என்பதையும் ஸூசிப்பிக்கிறது. யுவதய: - ஸ்த்ரீகள். தர்மம் அர்த்தம் காமம் இம்மூன்றுக்கும் இவர்கள் காரண மென்பது ப்ரஸித்தம். தம்பதிகளுக்குப் பரஸ்பரம் ஆநுகூல்ய மிருக்குமிடத்திலேதான் த்ரிவர்க்கங்களுடைய வ்ருத்தி ஸம்பவிக்கிறது. "யத்ரா நா கூஷ்ம்யம் ஊவதெ்யா ஹீவமதா ஹுத்ர வயதெ" என்பது ப்ரமாணம். தநயா: - குமாரர்கள். "யந்யா ஹுஷஂமாஜ ஷா ஜமி நீஹவஷீ" என்று கொண்டாடும்படி அவ்வளவு ப்ரீதி பாத்ரர்கள்; கேவலம் ஆலோகநத்தால் மாத்திரம் ஆஹ்லாதத்தைக் கொடுப்பவர்கள்; அஶக்தி ஜநிக்கும் காலங்களில் ஸம்ரக்ஷணத்தைச் செய்வதுடன், 'புத்' என்னும் ஒரு நரகத்திலிருந்து மாதாபிதாக்களைக் காப்பாற்றுகிறவர்கள்; "சூஷோடயஷீ விதரஃ வுநநதஷீ விதாஜஹா: - வெஷணவெ நஃ கூவெ ஜாத ஹு நஹுஷீாரயஷ்யதி" என்கிறபடியே தம்முடைய குணத்தால் பித்ருபங்க்திகளுக்கும் நிஸ்தாரகர்கள். 'யுவதய:' 'தநயா:' என்று பஹுவசநமாக ப்ரயோகம் செய்ததன் தாத்பர்யம் - இப்படிப்பட்ட பஹு பெயர்களால் ஸாத்யமான ஓர் உபகாரம் ஒரே வஸ்துவாக இருக்கும் அந்தப் பாதாரவிந்தத்தில் ஸமுதிதமாக இருக்கிறது என்பதை ஸூசிப்பிக்க வேண்டும் என்பது தான். விபூதி:- தந தாந்யம் முதலிய ஸம்பத். தாரகமாகவும் போஷகமாகவு முள்ள இந்த ஸம்பத் இல்லாவிட்டால் கீழ்ச் சொல்லப்பட்டவைக ளெல்லாம் ஸுக ஹேதுக்களாவதற்குப் பதிலாகத் துக்க ஹேதுக்களாகும் என்பதனுல் இதற்கு ஏற்றம். ஸவஂம் -

புருஷார்த்தங்களை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய இன்னும் இவை போன்ற வஸ்துக்கள். ஸாத்விகர்களால் அங்கீகரிக்கப்பட்டவை என்று தாத்பர்யம்.

உபநயாநாம் - என்னுடைய வம்ஶ்யர்களுக்கு. அதாவது - வித்யா ப்ரதாநத்தாலாவது, ஜந்மத்தினாலாவது என்னுடைய வம்ஶத்தைச் சேர்ந்தவர்கள் என்று தாத்பர்யம். தனக்கு முன்புள்ளோரும் பின்புள்ளோருமாகிய இரண்டு வகையாருக்கும் இவ்விடத்தில் க்ரஹணம்.

நியஜெந - ஸர்வகாலத்திலும்; முக்தி யடைந்த பிறகு கூட என்று தாத்பர்யம்.

யஜெவ - எந்தத் திருவடிகளோ. அந்தத் திருவடிகளைத்தவிர மற்றை எதுவும் அபேக்ஷிக்கத் தகுந்தது அன்று என்று கருத்து. மாதா முதலியவரைப் போல ப்ரியமாகப் பாராட்டுவது முதலிய குணங்கள் திருவடிகளுக்கு அநுபபந்ந மாகையால், பராங்குஶ முநிகள் என்கிற அர்த்தத்தில் அவரது திருவடிகள் என்கிற பதம் உபசரிக்கப்பட்டிருக்கிறது என்று அறியவேண்டும்.

வகுளஊாபிராமம் - வகுளபுஷ்பங்களால் அபிராமமாக இருக்கிற. பூஜார்த்தமாக ஸாத்விகர்களால் ஸமர்ப்பிக்கப்படும் வகுள புஷ்பங்கள் அந்தத் திருவடிகளை அத்யந்தம் அபிராமமாகச் செய்கின்றன என்று அர்த்தம். ஸ்ரீ பராங்குஶருடைய திவ்ய ப்ரபந்தங்கள் பரதத்வத்தை விஶதமாக நிர்ணயித்துக்கொண்டு ஸ்திரமான பரிமளத்தை வீசுகின்றன என்றும் இந்தப் பதம் ஸூசிப்பிக்கிறது.

ஸ்ரீமத் - பகவத் பக்தியாகிற ஸம்பத்தால் நிறைந்துள்ள. தம்மை ஆஶ்ரயிக்குமவர்களுக்கும் அப்படிப்பட்ட ஸம்பத்தைப் பூர்ணமாக அளிக்கும் திறமையுள்ளது என்று தாத்பர்யம். “ஸ துநாமவாஃ ஸ்ரீமாந்”, “லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நஃ ஸ்ரீமாந்” என்னும் இடங்களிற்போல இவ்விடத்திலும் ‘ஸ்ரீமத்’ என்னும் ஶப்தம் பக

வத் ஸேவைக்கு அபிமுகமாக இருககும் தன்மையைக் காண்பிக் கிறது என்றும் சொல்லலாம்.

ஸூஃபூவஸு நஃ கூரூவதெஃ - நம்முடைய ஆதிகுலபதி யினுடைய. தம்முடைய முன்னோர்கள் விஷயத்திலும் இவருடைய ப்ரபந்தங்களே ஜ்ஞாந வைராக்ய ஜநகங்களாயின என்பதால், 'ஆத் யர்' என்கிற ப்ரயோகம். ஸ்ரீ நாதமுநிகளுடைய ஸம்ப்ரதாயத் தை அவலம்பித்திருக்கும் தமக்கு அவர் அஸாதாரணமாகிற குல பதியாகிறதனால், '[நஃ - நம்முடைய]' என்று சொல்லப்பட்டிருக் கிறது. தமக்கு ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷகராகவும் ஶேஷியாகவும் இருக்கிறபடியால், பதி என்கிற ப்ரயோகம்.

கூஂவிரியாமஜூஂ - திருவடி த்வயத்தை. 'அரவிந்தம் போ ன்ற திருவடிகள்' 'அம்புஜம்போன்ற திருவடிகள்' இத்யாதி யான உபமை ஒன்றும் ப்ரயோகியாமல், 'திருவடி த்வயம்' என்று மாத்திரம் ப்ரயோகித்ததன் தாத்பர்யமாவது - இந்தத் திருவடிக ளுக்கு மற்றையெதுவும் ஸத்ருஶமாகாது; "ஈாஈாவணயொ யாழூஂ ஈாஈாவணயொரிவ" என்று சொல்வது போல இவைகளுக்கும் பரஸ்பர ஸாத்ருஶ்யம்தான் சொல்லக்கூடும் என் பதையும், நாம் தைவதமாகக் கொண்டாடும் தம்பதிகளாகிற ஸ்ரீ ஸ்ரீயஃபதிகள் இருவரும் சேர்ந்தே நமக்கு உத்தேஶ்யராவதுபோல இந்தத் திருவடிகளும் அவிபக்தங்களாகவே நமக்கு உத்தேஶ்யங் கள் என்பதையும் த்யோதிப்பிக்க வேண்டும் என்பது தான் என்று ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருவுள்ளம்.

உசீருாடி ஹணஊஜி - கேவலம் வாக்கினால் மாத்ரமாவது மநஸ்ஸால் மாத்ரமாவது நமஸ்கரிக்க வில்லை; "ஸஊஷிக்ஷஃ ஹணாஊஃ ஸ்யா ஒஂஜலிஂ ஊஸிகெ ஹெலக" என்கிறபடி காயிக மாகவும் அஞ்ஜலியை ஶிரஸ்ஸில் வைத்துக்கொண்டு நமஸ்கரிக் கிறேன் என்று கருத்து.

(இன்னும் வரும்.)

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

# ஆர்யவித்யை.

ஸ்ரீயஃபதியான பகவான் ஸ்ரீமந்நாராயணன், "ஸம்ஹ்ருதிவிஶிஷ்டாநு வ்ருஜிநே ஜந்தூந் அநவதிமோக்ஷ ஜாதநிர்வேதா - கரணகலேவர யோகம் விதரஸி வ்ருஷஶைலநாத கருணே த்வம் ॥" என்று நம்ஆசார்யன் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்தபடி, ப்ரளயகாலத்தில் அசேதநமான ப்ரக்ருதியோடு கலந்து பிரிவில்லாமல் மோஹஸாகரத்தில் மூழ்கியிருக்கும் ஜீவாத்மராசியைக் கண்ணோக்கி, அவ்யாஜருஶமான க்ருபாபரீவாஹத்தால் அவர்களை உஜ்ஜீவிக்கச் செய்வதே ஆத்மலாபமென்று கருதி, அவர்களை ஓங்க வொட்டாமல் கட்டிக் கீழே அமிழ்த்தியிருக்கும் ப்ரக்ருதிபாஶத்தையே அவர்கள் மேலேறுவதற்கு உபயோகமான நூலேணியாக்குவது ஸர்வ ஶ்லாக்யமான உபாயமென்றும், தன்னுடைய அகடிதகடநா ஶக்திக் கேற்றதென்றும் நிஶ்சயித்து, ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் தக்கபடியுள்ள ஶரீரத்தை அளித்து, அதைக் கருவியாகக் கொண்டு அவனவன் ஈடேறும் மார்க்கத்தை அநுஸரிக்கும்படி ஸங்கல்பித்திருக்கிறான் என்பது ஶாஸ்த்ரஸித்தம். இவ்வாறு ஶரீரத்தை நமக்கு அளித்த ஸர்வேஶ்வரனுடைய அபிப்ராயப்படி நாம் அதை நம்முடைய ஶ்ரேயஸ்ஸுக்கு ஸாதகமாக்கிக் கொள்வதனால் அதைச் சரிதார்த்தமாக்குவதே நமது கடமை யென்பதும், அப்படிக்கல்லாமல் அதை வேறு உபயோகப்படுத்துவது நாம் ஏறுவதற்குக் கொடுத்த கயிற்றைக் கழுத்திலிட்டுக்கொள்வதுபோல ஸர்வப்ரகாரமாயும் நம்முடைய அநிஷ்டத்துக்கு ஹேதுவாகுமென்பதும் ஸூசிதம். இவ்வாறு நமது ஜந்மத்தின் ஸ்வரூபத்தையும் ப்ரயோஜநத்தையும் தெளிவாய் அறிந்துகொண்டு அதற்கு அநுகுணமாகத் தங்கள் அநுஷ்டாநங்களைச் சீர் படுத்தியிருக்கும தத்வதர்ஶிகளே, ஆர்யர்களென்று வ்யபதேஶிக்கப்படுகிறார்கள். இந்தப் பரமோத்தேஶத்தை நிர்விக்நமாய் நிறைவேற்றுவதற்காக அவர்கள்

நிஷ்பத்திபண்ணியிருக்கும் மார்க்கங்களும், உபாயங்களுமே, 'ஆர்ய வித்யை' என்று கூறப்படுகின்றன. 'விதூதெ ஊநயெதி விதூா, ஜாநாணாம் விதூா ஜாநூவிதூா' அதாவது-எதனல் நமக்கு ஜ்ஞாநமுண்டாகிறதோ அது வித்யை; யதார்த்தஜ்ஞாநம். அதாவது - தத்வஜ்ஞாநம் உண்டாவதற்குத் தத்வதர்ஶிகளான மஹான்களுக்குத் தங்களுடைய ஶக்தியாலும் பகவத் ப்ரஸாதத்தாலும் புலப்பட்டு அவர்களால் அநுஷ்டிக்கப்பட்டும் லோகோபகாரார்த்தம் ப்ரவசநம் பண்ணப்பட்டும் வரும் மார்க்கங்கள் ஆர்ய வித்யா ஶப்தத்தால் வாச்யமாகின்றன. மநுஷ்யஸ்ருஷ்டி விசித்ரமாயும் பஹுப்ரகாரமாயு மிருப்பதாலும், மநுஷ்யர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஏற்பட்டிருக்கும் பேதங்கள் யாத்ருச்சிகமாக ஸம்பவிக்காமல் அவரவருடைய ப்ராசீந கர்மவாஸநையை அநுஸரித்து உண்டாயிருப்பதாலும், எல்லா மநுஷ்யர்களும் ஒரே ப்ரகாரமான மார்க்கத்தை அநுஷ்டிக்க அதிகாரிகளாக மாட்டார்கள். ஆகையால், அந்தந்த வ்யக்தியின் யோக்யதைக்குத் தக்கபடி அவரவர் அப்யஸிக்கவேண்டிய வித்யையின் பத்ததியும் வேறுபடவேண்டியது அவஶ்யம்.

ஒரே சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் அநேக குற்றவாளிகளில் ஒவ்வொருவனும் அவனவனது குற்றம் வயஸ் முதலியவற்றுக்குத் தகுந்த ஶிக்ஷையை அடைந்து அதற்கு அநுகுணமாக வெவ்வேறு வேலைகளில் நியோகிக்கப்பட்டு அவனவனுக்குக் குறிக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் சிறைச்சாலையிலிருந்து விடுபடுவதைப் போல, ஒவ்வொரு சேதநனும் தன் தன் கர்மத்துக்கு அநுரூபமான ஶரீரத்தையும் அதற்குள்ள அந்தஸ்தையும் அடைகிறான். இவ்விதம் ஒவ்வொருவருக்கும் விஹிதமாயிருக்கும் அதிகாரத்தைக் கவனித்து அதற்கு அநுகுணமாக அவரவர் உஜ்ஜீவநமார்க்கம் தேடவேண்டுமேயொழியத் தன் அதிகாரத்துக்கு மீறியாவது குறைந்தாவது முயற்சிசெய்தால் அநர்த்தத்தையே தேடிக்கொள்வதாகும். வித்யாவிஷயத்தில் இது முதன்மையாகக் கவனிக்கவேண்டிய அம்ஶம். இதுவிஷயமாகப் பெரியோர்கள் அபிப்ராயங்களை ஆராய்ந்தால், வித்யாதிகாரிகளை ஸ்தூலமாய் உத்தமாதிகாரிகள், மத்யமாதிகாரிகள், அதமாதிகாரிகள் என்று மூன்று வகுப்பாகப் பிரிக்கலாமென்று தோன்றுகிறது. பிறவியிலேயே ப்ரபுத்தர்களாய் ஸஹஜமாகவே விஷயத்தில் பற்றுவையாமல் ஆத்மதுஷ்டர்களாய் ப்ர

ஹ்மாநுபவ மல்லாது மற்றெதுவும் உணர ஶக்தியற்றுப் பிறந்திருக்கும் ஶுகர் முதலியவர்களை உத்தமாதிகாரிகளாக நினைக்கவேண்டும். லோகத்தில் பற்றுதல் ஜந்மஸித்தமாய் ஏற்பட்டிருந்தும், முதலெடுப்பிலேயே லோகவ்யாபாரத்தை ஸங்யஸிக்கத் தகுந்த முதிர்ச்சி ஏற்படாமலிருந்தும், லோகமும் அதன் விஷயங்களும் நஶ்வரமென்றும் அவைகளை மிதித்தேறுவதே நமது கடமையென்றும் அக்கடமையைப் படிப்படியாய் அவதாநத்துடன் நாம் ஸாதிக்க வேண்டுமென்றும் அப்படிச் செய்வதால் லோகத்தை நடத்த வேண்டிய பொறுப்பைக் கைவிடக்கூடாதென்றும் தெரிந்துகொள்ளவும், அந்த ப்ரகாரம் அநுஷ்டிக்கவும் அபிஸந்தியும் ஊக்கமும் ஶக்தியுமுடையவர்களை மத்யமாதிகாரிகளாகச் சேர்க்கலாம். இவ்வளவுகூட அறிந்துகொள்ளவாவது அநுஷ்டிக்கவாவது வல்லமை போதாமல் ஸ்வரூபத்தையே தெளிவாய் அறிந்து சொல்ல ஶக்தியற்றவர்கள், அதமாதிகாரிகளாவார்கள். ஏறக்குறைய இம்மாதிரியான விபாகத்தை அநுஸரித்தே சாதுர்வர்ணயம் பிரிக்கப்பட்டிருப்பதாக நினைக்க இடமுண்டாகிறது.

இம்மூன்றுவகை அதிகாரி கோஷ்டிகளுக்கும் பாஹ்யர்களாயிருப்பவர்களு முண்டு. அவர்கள், தேஹாத்ம பரமாத்ம பேதமே இல்லை யென்றும், அப்படி இருப்பதாகச் சொல்வது பொய் என்றும, பரலோகமென்பது மோசமென்றும், ப்ரத்யக்ஷம் தவிர வேறு ப்ரமாண மில்லையென்றும் பிடிவாதமாய் எண்ணியிருப்பவர்கள். அவர்கள், விபரீத ஜ்ஞாநமுடையவர்களாகையால வித்யைக்கு அநதிகாரிகளாகிறார்கள். ஆகையால், அவர்களை அதிகாரி ஸமுதாயத்தில் எந்தப்படியிலும் சேர்க்க இடமில்லை. இந்த விசாரத்திலும் அவர்களுக்கு ப்ரவேஶமில்லை.

க்ஷீரஸாரமான நவநீதத்தைச் சேதநனுக்குக் கிடைக்கக்கூடிய 'நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி' என்று நிர்தேஶிக்கப்பட்ட ஸர்வோத்க்ருஷ்டமான பதவிக்கொப்பாகச்சொன்னால், மேற்கூறிய உத்தமாதிகாரிகளை நவநீத தஶைக்குக் கூடியவரையில் அவ்யவஹித பூர்வதஶையி லிருக்கும் தயிர்க்கு ஸமாநமாகச் சொல்லலாம். மத்தையிட்டுக் கடையுமளவான ஸம்ஸ்காரம்தான் அவர்களுக்குத் தேவை. அது நேர்ந்தவுடன் அவர்கள் உத்தம தஶையை அடைகிறார்கள். மத்யமாதிகாரிகளை க்ஷீரத்துக்கு ஸமாநமாகச் சொல்லக்கூடும். பஶுவின் மடியில் சேர்ந்திருப்பது முதல் புரை

குத்தித் திரிபு அடையும் வரையிலுள்ள எல்லாத் தசைகளிலும் அது க்ஷீர ஶப்தத்தால் வ்யவஹரிக்கப்படுகிறது. பஶுக்களுடைய குண பேதத்தாலும் ஆஹார பேதத்தாலும் மறுபடி கறந்து உபயோகப்படுத்துபவர்கள் உண்டாக்கும் மாறுதல்களாலும் க்ஷீரத்தில் அநேக ப்ரகாரமான பேதங்கள் உண்டாகின்றன. இம்மாதிரியே மத்யமாதிகாரிகளும் பஹுவித பேத முள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால், க்ஷீரமென்கிற வஸ்துவுக்கு ஏற்படவேண்டிய ஸம்ஸ்கார ப்ரக்ரியை அநேகமாய் ஒரு மாதிரியாயிருப்பது போல மத்யமாதிகாரிகளுக்குத் தேவையான வித்யா ஸம்ஸ்காரமும் ப்ராயஶ: ஒருவகைப்பட்டதென்றே எண்ணலாம். பஶுவுக்கு ஆஹாரமாயுள்ள புல் பூண்டு முதலியவை பஶுவினால் உட்கொள்ளப்பட்டு க்ஷீர ரூபத்தை அடைவதற்கு முன்னே த்ருணாதி ரூபமாயிருக்கும் தசையை அதமாதிகாரத்துக்கு உபமானமாகச் சொல்லலாம். இவர்கள் ப்ரபல ஸம்ஸ்காரத்தினால் ப்ராயேண ஜந்மாந்தரத்தில் ரூபாந்தரத்தை அடைந்து க்ஷீர தசையை அடைய வேண்டியவர்களா யிருக்கிறார்கள். வித்யையைப் பற்றின இந்த விசாரத்துக்கு முக்யவிஷயம் மத்யமாதிகாரிகளே. உத்தமாதிகாரிகளின் ஸம்ஸ்காரத்தைப் பற்றிப் பேச நாம் அர்ஹரல்லர். மேலும், அது லோகஸாமாந்யத்தின் அநுஷ்டாநத்துக்கு உதவிபாகமாட்டாது. அதமாதிகாரிகள் விஷயத்திற் சொல்லவேண்டிய அம்ஶம் அதிகமில்லை. மேலும், மத்யமாதிகாரிகள் செவ்வைப்பட்டால் அதமாதிகாரிகள் தாமே சரியாய் விடுவார்கள்; சரிசெய்யவும் படுவார்கள். மத்யமாதிகாரிகளை லோகத்துக்கு ஜீர்ணாஶயம் மாதிரி எண்ணலாம். ஜீர்ணாஶயம் கெடாமலிருந்தால் வ்யாதியே கிடையாது. அது ஸ்வஸ்தமானால் முழுஶரீரமும் ஸ்வாஸ்த்யத்தை அடைவதற்கு ஸந்தேஹமே யில்லை. ஆகையால், இப்போது மத்யமாதிகாரிகளின் வித்யாப்யாஸ ப்ரக்ரியையைப் பற்றிச் சற்று விஸ்தாரமாகச் சொல்லவேண்டியது அவஶ்யமாகிறது.

வித்யை மநுஷ்யனுக்கு ஸர்வதோமுகமான ஸம்ஸ்காரமாகையால், அது அவனுடைய எல்லாத் தத்வங்களையும் சீர்படுத்தும்படி பூர்ண நிஷ்பத்தி யுள்ளதாயிருந்தால்தான் அந்யூநமான பலஸித்தியைத் தரும். ஸாதாரணமாய் மநுஷ்யனுக்கு நாலு தத்வங்கள் (அல்லது அம்ஶங்கள்) அமைந்திருக்கின்றன; அவையாவன:—ஶரீரம், புத்தி, மநஸ், ஆத்மா என்பவை. ஶரீரம் மூன்று பிரிவுள்ளது;

ஜ்ஞாநேந்த்ரியங்கள் கர்மேந்த்ரியங்கள் இவ்விருவகை இந்த்ரியங்களின் உபகரணங்கள். ஜ்ஞாநேந்த்ரியங்கள் - சக்ஷுஸ் ச்ரோத்ரம் முதலியவை; கர்மேந்த்ரியங்கள் - பாணி பாதாதிகள்; இவைகளுக்குத் தளர்ச்சியுண்டாகாமல் இவைகளுக்கு வேண்டிய ஆஹாரரஸங்களைப் பாகம்செய்து குழவதூவைப்போலப் போஷித்து வரும் ஜீர்ணாசயம், ரக்தாசயம் முதலிய அந்தரவயவங்கள் கீழே சொல்லப்பட்ட மூன்றாவது பிரிவில் அடங்கியவைகள். புத்தி தத்வமானது, நம்முடைய யுக்தி ஆலோசனை முதலியவற்றின் காரணம். அதன் குணங்கள் எட்டு; அவையாவன்:—க்ரஹணம்-விஷயங்களை க்ரஹிப்பது; தாரணம் - க்ரஹித்த விஷயங்களை நம்மிடம் நிலைநிறுத்திக்கொள்வது; ஸ்மரணம் - பின்பு வேண்டிய ஸந்தர்ப்பங்களில் அவ்விஷயங்களை ஜ்ஞாபகத்துக்குக் கொண்டுவருதல்; ப்ரதிபாதநம் - நமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்குப் போதித்தல்; ஊஹாபோஹ: - ஸாதகபாதகங்களை விவேசநம் செய்து வேண்டியதை எடுத்துக்கொண்டு வேண்டாததை விலக்குதல்; அர்த்தவிஜ்ஞாநம் - வஸ்துக்களின் ப்ரயோஜநத்தைச் செம்மையாய் அறிவது; தத்வஜ்ஞாநம் - உண்மையைத் தெரிந்துகொள்வது என்பவை. சரீரத்தையும் புத்தியையும் அதததற்கு உரிய வ்யாபாரங்களைச் செய்யும்படி ப்ரேரணம் செய்வது, மநஸ்ஸின் தர்மம். மநஸ் ப்ரவ்ருத்திக்காமல் அவையிரண்டும் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. மநஸ்ஸினுடைய ஸஹாயமில்லாமலே புத்திக்குச் சிந்திக்கும் சக்தியிருந்தபோதிலும் மநஸ்ஸின் ப்ரேரணமில்லாமல் அதற்கு ப்ரவ்ருத்திக்கும் யோக்யதை கிடையாது. ஆகையால், மநஸ்ஸை சரீரம் புத்தி இவையிரண்டுக்கும் யந்தாவாக நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இம்மூன்றுக்கும் வேறுபட்டதும் உத்க்ருஷ்டமானதும் இவைகளுக்கு அங்கியாயும் சேஷியாயுமுள்ள ஆத்மதத்வம், நிர்மலமாயும் ஜ்ஞாநமயமாயும் ஸ்வயம்ப்ரகாசமாயுமுள்ளது. அது ஸ்வஸ்மை பாஸமாநமாகையால் 'ப்ரத்யக்' என்று வ்யவஹரிக்கப்படுகிறது; அதிலே மேற்கூறிய சரீரம், புத்தி, மநஸ் இம்மூன்றுக்கும் ஆதாரமாயும் நியந்தாவாயுமிருக்கிறது; ஸுக ரூபமானது. இதற்கு துக்கம் ஆகந்துகம்; கர்ம பந்தத்தினால் நேர்ந்திருக்கிறது.

இம்மாதிரியான மநுஷ்யனுடைய அம்சங்களைத் தெரிந்துகொண்டு அவற்றினுடைய தேர்ச்சியையும் உத்கர்ஷத்தையும் வ்ரு

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1.)

## ஹிந்துக்களின் மதக்கொள்கையும் அநுஷ்டாநங்களும்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஆர்யர்கள் உயர்ந்தவர்களென்றும் அவர்களது மதம் பெயர்பெற்றதென்றும் நாம் புகழுடன் சொல்லிக் கொள்ளுகிறோம். இதனாலேயே நாமும் நம்முடைய மோக்ஷத்தை உபதேசிக்கும் மதம் ஶ்லாக்யமென்றும், அப்படி அநுஷ்டிக்காமலிருக்கும் நம்மவர்களும் பாஶ்சாத்யர்களும் கேவலம் லோக விஷயங்களிலே காலத்தைக் கழிக்கிறார்கள் என்றும் ஹேளநமாய்ச் சொல்வது வழக்கம். அப்படிச் சொல்வதிலும் நமது தேசாபிமாநம் அதிகரிக்கிறதாகவும், ஆகையால் அதை வ்ருத்தி செய்யத்தக்க ப்ரயத்நங்கள் செய்ய வேணுமென்றும் நினைக்கப்படுகிறது.

நம்முடைய மதக்கொள்கையினால் நம்முடைய ஸகல கர்மாவும் பாவநமாகிறது என்பது உண்மையே. தவிரவும், ஆத்மோஜ்ஜீவநமே ஆவஶ்யகம், அதற்கு அநுகுணமாகவே ஒவ்வொரு கர்மாவும் இருக்கவேணும் இத்யாதியான எண்ணம் அநேக நற்குணங்களை உண்டு பண்ணுகிறது என்பது தத்வமே. எந்தவிஷயத்திலும் பகவானே ப்ரேரிப்பிக்கிறான் என்று சொல்வதும், பலத்தை அவனுக்கு அர்ப்பணம் செய்வதும், முக்யமான நல்லகாரியங்களே. இதை ஸரியாகக் கொள்பவர்களுக்கு அஹங்கார மமகாரங்கள் நீங்கி மநஸ்ஸுக்கு ஶாந்தியைக் கொடுக்கிறது என்பதற்கும் ஆக்ஷேபமில்லை. இந்த முக்கிய அபிப்ராயங்களே ஹிந்துக்களுடைய நடவடிக்கைகளையும், மனத்தின நிலைமையையும் நிஶ்சயிக்கும் ஹேதுவாக இருக்கின்றன. மதங்களில விஶ்வாஸமும், அநுஷ்டாநமும், ஶக்தி அல்லது ஸாமர்த்யம் அற்றவர்களுக்கே லோகத்தில் அதிகரிப்பதைப் பார்க்கிறோம். தம்முடைய பலக்குறைவினாலேயே மேலான ஓர் பலம், ஶக்தி, தேஜஸ் இவைகள் இருக்கின்றன என்று முதலில் ஒரு நம்பிக்கை ஜநிக்கிறது. இந்த எண்ணம் ஸ்வபாவத்தினாலே வம்ஶ ஸம்ருத்தியும் வைஶால்யமுமுள்ள இந்த ஹிந்து தேஶத்தவர்களுக்கு ஸஹஜமாயிருக்கிறது.

இந்த எண்ணங்கள் அதிகரிக்கும்போது, லோகத்தை விடுவதும், தன் ஆத்மாவின் க்ஷேமமாகிய மோக்ஷத்துக்கு உரிய ப்ரயத்நங்களைச் செய்வதும் பலப்படுகின்றன. இப்படி தம்முடைய மோக்ஷத்தைத் தேடிக்கொள்

ளில் ப்ரவ்ருத்தித்தால் பல ஸித்திக்கு ஆக்ஷேபமில்லை. அப்படிக்கில்லாமல் நமது சொந்த ஶக்தியால் ஸாதிக்கலாம் என்று ஆரம்பம் செய்வது ஒரு ஸௌதத்தில் ஏறவேண்டுமென்று விரும்புகிறவன் அந்த ஸௌதத்திலிருந்து கீழே தொங்கவிடப்பட்டிருக்கும் பலமான கயிற்றை அவலம்பித்து ஸுலபமாய் ஏறாமல் தான் ஶரீர லாகவத்தால் உயரக் கிளம்பி, அவலம்ப மில்லாமலே ஏறிவிடலாமென்று நினைத்து அந்த ப்ரகாரம் முயற்சிசெய்வது போலாகும். இம்மாதிரியாக ஶரீரம் மநஸ், புத்தி, ஆத்மா இவைகள் ஒன்றுக்கொன்று அப்ருதக்ஸித்தமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்றும், அவைகளில் ஒன்றை ஸம்ஸ்கரிக்க வேண்டுமானால் மீதியெல்லாவற்றையும் ஸம்ஸ்கரிக்கவேண்டியது அவஶ்யமென்றும், அவைகளில் ஒன்றின் ஶ்ரேயஸ் மற்றெல்லாவற்றின் ஶ்ரேயஸ்ஸையும் பொருந்தி இருக்கிறதென்றும் தெரிந்துகொள்ளாதவர்கள் வித்யா ப்ரக்ரியை விஷயமாக எந்த ஆரம்பமும் செய்ய அதிகாரிகளல்லர். ஆனால், வைபரீத்யமே ஒழுங்காய் விளங்கும் இந்நாட்களில் வித்யையின் பத்ததி மேற்கூறியவாறு உள்ளதென்று சொல்வது பரிஹாஸ்யமாயிருக்கு மென்பதற்கு ஆக்ஷேபமில்லை. வித்யாவிஷயத்தில் நமது தேஶத்தில் ஏற்பட்டிருக்கும் குணம் வேறெங்குமில்லை. ஸாதாரணமாய் இப்போது நமது தேசத்தில் வழங்கும் வித்யா பத்ததிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று ஸ்வதேஶ வித்யா பத்ததி; மற்றொன்று விதேஶ வித்யா பத்ததி. இவற்றுள் ஸ்வதேஶ வித்யா பத்ததி யென்பது முக்யமாய் ஸம்ஸ்க்ருத வித்யாப்யாஸம் நடந்துவரும் க்ரமத்தையே குறிக்கிறது. இதரதேஶ பாஷைகள் ஸம்பத்தப்பட்ட வரையில் அவைகள் கொஞ்சகாலமாய்த் தனிமையாகப் பலர்களால் அநேக காரணங்களை முன்னிட்டுக் கற்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டு மிருந்தபோதிலும் அவைகளின் வழி முழுவதும் ஸம்ஸ்க்ருதத்தை அநுகாரம் பண்ணுகிறதே யொழிய வேறு இல்லை. விதேஶ வித்யா பத்ததி யென்பது இங்க்லீஷ் பாஷையையும் அதில் ஏற்பட்டிருக்கும் ஶாஸ்த்ராதிகளையும் ராஜாங்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கலாஶாலைகளில் போதிக்கும் ப்ரகாரம்தான்.

(இன்னும் வரும்.)

தி. ஈ. சடகோபாசாரியர்.

த்திசெய்வதுடன் ஒன்றுக்கொன்று ஸங்கர்ஷம் நேராமலிருக்கும்படி (அதாவது - ஒரு அம்ஶத்தின் ஶக்தியை வ்ருத்தி பண்ணுவதால் மற்றொன்றின் பாடவத்துக்கு ஹாநியில்லாமல் மொத்தத்தில் எல்லாம் சேர்ந்து மநுஷ்யனுடைய ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸுக்கு ஸாதநமாகும்படி) அதனதனை எவ்வெவ்விதமாக ஸம்ஸ்கரிக்க வேண்டுமோ அந்தந்தப் பத்ததிகளைத் தெளிவாய் எடுத்துக்காட்டுவது தான் ஸத்வித்யையின் லக்ஷணம். இதுதான், நமது பூர்வ பிதாமஹர்களான மஹர்ஷிகளால் முக்காலத்துக்கும் பொதுவான ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதிகளில் வ்யக்தமாய் எடுத்துக்காண்பிக்கப் பட்டிருக்கிறது. நமது பெரியோர்களின் அபிப்ராயப்படி நமது ஶரீரம் ஆத்ம மநோ புத்திகளுக்குக் கீழ்ப்பட்டதும் அவைகளுடைய கார்ய ஸாதநத்துக்கு உபயோகப்படும்படியானதுமான ஒரு கருவி. இதுதான் 'ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்' என்று சொன்ன கவியின் அபிப்ராயம். இதனால், ஶரீரத்தின் ஸ்வரூப யோக்யதை தர்மத்துக்கு (அதாவது - புருஷார்த்த ஸம்பாதக வ்யாபாரங்களுக்கு) உபயோகமாயிருப்பதுதான் என்றும், அப்படி உபயோகப்படும் கருவிகளில் ஶரீரம் முதன்மையானதென்றும் (அதாவது - முதலில் கவனிக்கத் தக்கதென்றும்), அரண்மனைக்குள்ளிருக்கும் அரசனிடம் சென்று ஸம்பாஷணம் செய்ய விரும்புகிறவன் முதலில் த்வார்ஸ்த ஸேவகனுடைய அநுமதியை ஸம்பாதிக்க அவனை ஸ்வாதீநம் செய்துகொள்வது அவஶ்யமாயிருப்பது போலப் புருஷார்த்த ஸாதநத்துக்கு ப்ரவ்ருத்திப்பவன் ஆதியில் ஶரீரத்தை வசப்படுத்த வேண்டியது அவஶ்யமென்றும் விளங்குகிறது. இவ்விதம் ஶரீரம் ஸ்வாதீநப்படுவதற்கு மநஸ்ஸை வஶப்படுத்த வேண்டியதும், மநஸ்ஸை வசப்படுத்துவதற்குப் புத்தியை ஸம்ஸ்கரித்துக்கொண்டு ஸதஸத் விவேசநம் ஸம்பாதித்துக்கொள்வதும் அவஶ்யமாயிருக்கின்றன. அநந்யமநஸ்கனாய் ஆத்மாநுசிந்தநம் அடிக்கடி செய்யாதபக்ஷத்தில் மநஸ் வசப்படாது; புத்திக்கும் வைஶத்யம் உண்டாகாது. அநந்ய பக்தியுடன் பகவத்த்யாநம் பண்ணாதபக்ஷத்தில் ஆத்மாநுசிந்தநம் தேறாது. பகவானே உபேயனாயிருப்பதுடன் உபாயமாகவும் இருக்கிறான். ஆகையால் அவனுடைய க்ருபையே நாம் தர்மாநுஷ்டாநம் ஸம்பூர்ணமாகப் பண்ணுவதற்கும் ஸத்ய ஜ்ஞாநம் ஸம்பாதிப்பதற்கும் ப்ரதம ஸாதநம் என்கிற விஶ்வாஸத்துடன், ஶாஸ்த்ரோக்தமான மார்க்கங்க

வதில் ப்ரயத்நம் பலப்பட இதராருடைய ஸுகதுக்கத்தைக்கூடக் கவனியாமல் போவது வ்ருத்தியாவதை நாம் காண்கிறோம். தங்களுக்கு நேரிடும் அஸௌகர்யங்களை ஸரிப்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய ஶக்தியும் குறைவுபடுகிறது; ஸ்வபாவமாகத் தேஹத்தில் பரபரப்புக் குறைந்து கார்ய நிர்வாஹஶக்தி நாளடைவில் குறைவுபட்டு, அல்ப விஷயங்களுக்குக்கூடத் தெய்வமே மூலமென்று சொல்லும் அநேகர் ஸம்பவிக்கிறார்கள் இவ்விதமாக மதப்பயிற்சியால் ஸ்வாபாவிகமான உத்தமகுணங்கள் சில லோபம் அடைகின்றன. பாஶ்சாத்யர்களிடம் விஶேஷமாய்ப் பயிற்சி யடைந்திருக்கும் தைரியம், மனோநிஶ்சயம், உண்மையே பெரிது என்கிற நினைவு, பஹுஜன ஆநுகூல்யத்தையே தேடும் ஸ்வபாவம், அதற்காகத் தாம் அளவற்ற பரிஶ்ரமப்படுவது ஆகிய இந்தக் குணங்கள் நம்மிடத்தில் குறைந்திருப்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ள வேண்டியது. நம்மவர்களில் மதங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்கள்கூட அநேகர் தங்களுடைய புத்திக்கு ஸரியான பயிற்சியை உண்டாக்க உத்தேசித்தவர்க ளல்லர். நமது மதக்கொள்கைக்கு உயர்ந்த லோகோபகாரமான நடத்தையும் ஒன்றே என்று சொல்ல முடியாது. ஆகையினாலே தான் கோயில்களிலும் இதரமத ஸம்பந்தமான ஸ்தாநங்களிலும் ஐகமத்யக் குறைவை நாம் பார்க்கிறோம. ம்ருது ஸ்வபாவமும், ஶாந்தகுணமும், எப்பொழுதும் ஒருவரையும் மனம் கலங்கச்செய்யாமலிருப்பதுமாகிய நல்ல குணங்கள் உத்தமங்களென்று நினைக்கப்படுகின்றன. திவ்யதேஶங்கள் யாத்திரைசெய்து பாபங்களைப் போக்கடிக்க வேணுமெனவிரத தங்களுடைய மனத்தில் நல்ல நிஶ்சயம இருக்கிற தென்றும் அதைப் பயிற்சி செய்ய வேணுமென்றும் நினைக்கப்பட வில்லை. ஸத்யமும் மனோநிஶ்சயமும் இல்லாத பகவத் ஸேவை என்னபயனைக் கொடுக்கும்? மேன்மையான பயிற்சியை வ்ருத்தி செய்யாத ஸித்தாந்தமும் மதமும் நம்மை வெகுகாலமாய்த தாழ்ந்த ஸ்திதியில் வைத்திருக்கின்றன. ஸ்வலாபத்தைத்தேடும் உத்தேஶத்தையும் ஸத்யத்திலிருந்து தவறுதலையும் வேதாந்திகளிடத்தில் காணலாம். தங்களோடு கூடக் கஷ்டப்படுமவர்களுக்கு ஸுகத்தையும ஜ்ஞானத்தையும பெருக்கமுயலாத ஒருவ்யக்தியை ஈஶ்வரன் திருவுள்ளம்பற்றித தன்னோடு ஸாம்யத்தை உண்டு பண்ணுகிறான் என்பதை எப்படி நம்புகிறது? ஆகையினால எவ்வளவு மதஜ்ஞானமும் தைவபக்தியு மிருந்தாலும், தன்னுடைய நித்யகர்மாவில் ஆர்ஜவமும் ஸ்வலாபத்தையே அபேக்ஷியாமல் பிறர் உதவியிலும அதனால் அவர்களுக்கு உண்டாகும் ஸுகத்திலும் ஊக்கமும உள்ளவராய், ஈஶ்வரனே ஸர்வத்துக்கும் கர்த்தா பராமரிதாவென்கிற வினை எண்ணம கொள்ளாமல எல்லாரும இருக்கவேணும். இதுவே பகவர் முமகால்லாஸத்தைச் செய்கிறது என்பதற்கு ஸம்ஶயமே இல்லை.

சித்தூர்,
20—6—18.

நிஜமதம்.

[வேதாந்திகள் பரதுக்க பராங்முகர்களாய் ஆத்மலாபத்தையே தேடி ப்ரவ்ருத்திக்கிறார்கள் என்றும், அப்படிப்பட்ட வேதாந்திகள் நமது தேஶத்தில் அதிகரித்திருப்பதால் தான் நமது தேஶத்திற்கு ஒரு தாழ்வு உண்டாகி யிருக்கிறது என்றும் இவர் எழுதியிருப்பதை அபிஜ்ஞர்கள் அப்யுபகமம் செய்யமாட்டார்கள். வேதாந்திகளிடத்தில் ஸத்யமில்லை என்றுசொல்வது அவிவேகியினுடைய வார்த்தைபோலத் தோன்றுகிற படியால் அது ப்ரதிக்ஷேபார்ஹமன்று என்று நாம்நினைக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.]

# விஶிஷ்டாத்வைதம்.

## (2.)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

தேவரீர் அடியேனுக்கு வெகுநாளா யிருக்கிற ஒரு ஸம்ஶயத்தை வேதாந்த தீபிகையிற் ப்ரசுரஞ்செய்து, அடியேனை அநுக்ரஹிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

தற்காலம், ‘த்வைதம்,’ ‘அத்வைதம்,’ ‘விசிஷ்டாத்வைதம்’ என்று மூன்று மதங்கள் நிரம்ப ப்ரஸித்தி பெற்றவைகளென்று எல்லோர்க்கும் தெரிந்த விஷயமே. அவற்றுள், ‘த்வைதம்’ என்கிற பெயரைக் கேட்ட மாத்திரமே “ஜீவேஸ்வரபேதம்” ஸ்பஷ்டமாய்த் தோன்றுகிறது. அவ்விதமே ‘அத்வைதம்’ என்ற பதஸ்ரவணத்தாலே, அத்வைதிகளுக்கு அபிமதமான ‘ஐக்யம்’ ஸ்பஷ்டமாகிறது. அவ்வண்ணமே ஆலோசித்துப்பார்ப்போமே யாயின், “விசிஷ்டாத்வைதம்” என்கிற பதத்தால் விசிஷ்டாத்வைதிகளுக்கு அபிமதமான ஸித்தாந்தார்த்தம் யாதொன்றும் தோன்றுவதவசியமென்று நமக்குப் புலப்படுகிறது. ஆயினும், இன்னது தான் அந்த பதத்தின் அர்த்தமென்று நமக்கு நன்றாய் விளங்கவில்லை. அத்வைதத்தோடுகூட விசிஷ்ட மென்பது அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறது. அங்கு ‘வைசிஷ்ட்ய’ மென்று மென்ன? மேலும், எந்த அம்ஶத்தில வைசிஷ்டயம? மற்றும் சிலர் ‘விசிஷ்டாத்வைத மென்ற பெயர் கல்பிதம்; பாரமார்த்திகமாய்ப் பார்த்தால் ஸ்ரீ ‘ராமாநுஜீய மதம்’ என்றுதான் சொல்வது உசிதம்’ என்று சொல்லுகின்றனர். அப்படியே யிருப்பதாக ஒத்துக்கொண்டாலும், தற்காலமுள்ள வ்யவஹாரத்திற்கு என்ன நியாமகமென்று சொல்லவேண்டிய தவசியமென்று நமக்குத் தோன்றுகிறது. மேலும், சிலர் ‘விசிஷ்ட’ பதம் சுத்தாதிரிக்தபரம் என்றும் சொல்லக்கேட்டோம். சுத்த விசிஷ்டவ்யவஹாரமோ என்றால் அத்வைதிகளுக்கு மாத்திரமே கூடுமேயன்றி மற்றமதஸ்தர்களுக்குக் கூடாதென்று தோன்றுகிறது. ஆகையால், இந்த விஷயத்தில் நமக்குண்டான ஸம்ஶயத்தை விசிஷ்டாத்வைத

பண்டிதர்கள் தயைசெய்து பரிஹாரம் செய்வார்களென்கிற நம்பிக்கையின் பேரில் நாம் தீபிகைக்கு எழுதலானேம். ஸர்வதா இந்த ப்ரஸ்நம் ஜிஜ்ஞாஸாமூலகமேயன்றி வேறல்ல.

இப்படிக்கு
தங்கள் ப்ரேமபாத்ரன்
கே. ஆர். நாகராஜசர்மா,
மத்வமதாபிமானி.

கும்பகோணம்,
வெங்கட்டராயர்தெரு
ஜூன்—2—13.

[ஸ்ரீ வேதாந்த தீபிகையின் முதல் (அதாவது விரோதிக்ருத்) வருஷத்திய சித்திரை மாஸத்திய ஸஞ்சிகையில் 107-வது பக்கத்தில் இந்த ப்ரஸ்நத்திற்கு ப்ரத்யுத்தரத்தைக் காணலாம். ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்கு முன்னமே பகவத் போதாயந ஸ்ரீ நாதமுநி ஸ்ரீ யாமுநார்ய ப்ரப்ருதிகளான கணக்கற்ற விஶிஷ்டாத்வைதிகள் இருந்தார்களென்றும், அவர்கள் விஶிஷ்டாத்வைத ஸம்பந்தமாக அநேக க்ரந்தங்கள் செய்திருக்கிறார்களென்றும் தெரிந்தவர்கள் விஶிஷ்டாத்வைத மதம் ஸ்ரீராமாநுஜாசார்யரால் உண்டு பண்ணப்பட்டது என்று சொல்லத்துணியார்.]

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.

---

ஸ்ரீ:

# பிரிவுகளின் அறிக்கை.

## கூடலூர் பிரிவு.

சென்ற வைகாசிமீ 15உக்குச் சரியான மேமீ 28உ புதன்கிழமை மாலை 2-மணிக்கு, தென் ஆற்காடு ஜில்லா விழுப்புரத்துக்கடுத்த பெரும்பாக்கம் எனனும் க்ராமத்தில் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் உபஸபையாகிற கூடலூர் பிரிவினுடைய கூட்டமொன்று சேர்ந்தது. விழுப்புரத்தில் வக்கீலாக இருக்கும் ஸ்ரீ. வி. ரங்காசார்யர் அக்ராஸநாதிபதியாக இருந்தார். ஸமீப க்ராமங்களிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களில் அநேகர் அந்தக் கூட்டத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள்.

ஸ்ரீ ஸந்நிதி விஷயமாக ஸந்நிதி ஶிஷ்யர்களுக்குரிய தர்மங்களைப்பற்றி அக்ராஸநாதிபதி விஸ்தாரமாக உபந்யஸித்த பிறகு பின்வருமாறு மூன்று தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. ஶ்ரேயஸ் ஸாதகமான அநேக விஷயங்களைப்பற்றி சர்ச்சை செய்வதற்கு அத்யந்தம் உபகாரகமாக இருக்கும் ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபை போன்ற ஸபைகள் பலவிடங்களில் உண்டாக வேண்டியது அவஶ்ய

மென்றும், இந்த ஸபையைச் சேர்ந்தவர்களான ஶிஷ்யர்களிடத்தில் விஶ்வாஸத்துடன் அவர்கள் செய்துகொள்ளும் விஜ்ஞாபநங்களுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் ப்ரீதிபூர்வகமாகத் திருச்செவி சாற்றியருள்வதுடன், லக்ஷ்மீந்ருஸிஹ்மன் ஸந்நிதாநத்தில் யாராவது அஸாதுவான போதனையைச் செய்தால் அவர்களுடைய போதனைக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் உட்படாமலிருக்கவேண்டு மென்று ஸ்ரீ அழயகிய சிங்கரை ப்ரார்த்திக்க வேண்டு மென்றும் முதலில் தீர்மானிக்கப்பட்டது.

2. இதற்கு முன்னமே தஞ்சாவூர் ஸ்ரீ டாமங்கலம் மதுராந்தகம் ஆகிய இம்மூன்று ஸ்தலங்களில் நடந்த மஹாஸபைகளிற் செய்யப்பட்ட தீர்மானங்க ளெல்லாவற்றையும் இந்த ஸங்கம் அப்யுபகமம் செய்கின்றது என்பது, இரண்டாவது தீர்மானம்.

3. பிந்தி ஆஸ்தாநத்திற்கு எழுந்தருள வேண்டிய ஸ்ரீ ஸ்வாமி விஷயமாக இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர், ஶிஷ்யர்களுடன் கலந்து ஆலோசிக்காமலும் உயில் மூலமாகவும் செய்திருக்கும் ஏற்பாடு ஸ்ரீ மடத்தின் ஆசாரத்திற்கு விருத்தமாக இருக்கிறபடியால், அது விஷயத்தில் ஶிஷ்யர்களெல்லாரும் யதோசிதம் ஶ்ரத்தை எடுத்துக் கொண்டு ஶிஷ்யர்களுக் குள்ள பாத்யதையை ஸ்தாபிக்க வேண்டுவதற்கான முயற்சியையும் ஸஹாயத்தையும் செய்ய வேண்டும் என்பது, மூன்றாவது தீர்மானம்.

சித்தூர். 12—6—13. } ஸி. ராஜகோபாலாசார்யர்.

காரியதர்ஶீ.

---

ஸ்ரீ:.

## வர்த்தமானங்கள்.

(1.)

### திருவள்ளூர் தேவஸ்தாநம்.

கொஞ்ச காலமாக இந்தத் தேவஸ்தாநத்தின் விசாரணை ஸரியானபடி நடக்கவில்லை யென்று, திருவள்ளூர் வாஸிகளான ஸ்ரீ. ஈக்காடு ராகவாசார்யரும் ஸ்ரீ. ஓலையூர் க்ருஷ்ணமா சார்யருமாக, அந்தத் தேவஸ்தாநத்திற்குத் தர்மகர்த்தாவாகிற ஸ்ரீ அழகிய சிங்கர்பேரில் ஒரு வ்யாஜ்யம் செய்திருக்கிறார்கள். இந்த வ்யாஜ்யம் செங்கல்பட்டு ஜில்லாக் கோர்ட்டில் நடக்கிறது. சீக்கிரத்தில் அதைப் பற்றிய விசாரணையைக் கோர்ட்டார்கள் எடுத்துக்கொள்ளலாம். இந்தத் தேவஸ்தாநத்தின் தர்மகர்த்தாக்களாக ஸ்ரீ அழகிய சிங்கருடன் இன்னும் இரண்டொரு வடகலை ஸ்ரீவைஷ்ணவர்களை நியமிக்க வேண்டு மென்றும், தேவஸ்தாநத்தின் ஸம்பந்தமான

சென்ற சில வருஷத்திய கணக்குகளைக் கோர்ட்டார் பரிசீலநம் செய்து பார்க்கவேண்டு மென்றும், இனிமேல் இந்தத் தேவஸ்தாநத்து விசாரணை எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடமில்லாமல் நடைபெறும் பொருட்டுத் தகுந்த வ்யவஸ்தைகளைக் கோர்ட்டார் ஏற்படுத்த வேண்டு மென்றும் வாதிகள் கேட்டுக்கொண்டிருக்கிறதாகக் கேள்வி.

---

(2.)

## ஸ்ரீ அஹோபில மடத்திற்கு மைஸூர் மஹாராஜங்கத்தாராற் செய்யப்படும் மர்யாதை.

ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கர் ஸ்ரீ பரகால ஸ்வாமி ஸ்ரீதோதாத்ரி ஜீயர் இவர்கள் மைஸூருக்கு எழுந்தருளும் பொழுதெல்லாம் மைஸூர் மஹாராஜாங்கத்தார் அவர்களுக்கு முதல்தர மர்யாதை செய்வது பஹு காலமாக வழக்கமாக இருந்தது. இவ்விதமான மர்யாதை நடத்த வேண்டு மென்பது, அந்த ராஜாங்கத்துத் தஸ்தாவேஜ் ஆகிற 'வம்ஸரத்நாகரம்' முதலிய ரிக்கார்டுகளிலிருந்து தெரியவரும். சென்ற 1909-வது வருஷத்தில் ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கர் ஸ்ரீ தோதாத்ரி ஜீயர் இந்த இரண்டு ஜீயர்கள் விஷயமாக இந்த மர்யாதையைத் திறத்தில் குறைத்து மூன்றுவது திறத்துக்குமாற்றி அப்படி மாற்றியிருப்பதை அந்தக் காலத்திலேயே ராஜாங்கத்துப் பத்ரிகையில் ராஜாங்கத்தார் ப்ரசுரம் செய்திருக்கிறார்களாம். இப்படி ப்ரசுரம் செய்த விஷயம் இது வரையில் ஸ்ரீ ஸந்நிதிகளில் விஸ்வாஸமுள்ளவர் எவருக்கும் தெரிந்ததாகக் காணப்பட வில்லை. ஸ்ரீ ஸந்நிதி விஷயங்களைப் பராமர்ஸித்துவரும் ஸ்ரீ கார்ய கர்த்தாக்களும் இதைக் கவனிக்கக் காணோம். சென்ற மே மாஸத்தில் ஸ்ரீ தோதாத்ரி ஸ்வாமி மைஸூருக்கு எழுந்தருளியிருந்த பொழுது அவருக்கு நடந்த குறைந்த மர்யாதையைப் பார்த்த சில ஆஸ்திகர்கள் 'ஏன் இப்படி குறைந்த மர்யாதை நடக்கவேண்டும்?' என்று விசாரித்த பொழுது, 1909-வது வருஷத்திய உத்தரவு வெளிக்கு வந்ததாம். இப்படிக் குறைத்தது ந்யாய விருத்தமென்று அநேக உபபத்திகளையும் ரிக்கார்டு பாத்யங்களையும் எடுத்து விஸதமாக உணர்த்தி, அந்த உத்தரவை மாற்றி யதாபூர்வம் ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கரை முதல் தரமான மர்யாதைக்கு அர்ஹராக ராஜாங்கத்தார் கணநம் செய்துகொள்ள வேண்டியது என்று, ஸ்ரீ அஹோபிலமடத்து ஸிஷ்ய ஸபையின் பெங்களூர் பிரிவினுடைய கார்ய தர்ஸியாகிற ஸ்ரீ. பி. கே. கருடாசாரியர் மஹாராஜாவினுடைய திவானுக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறாராம். அந்த மனுவைத் திவான் அங்கீகரித்து அதிற்சொல்லப்பட்டிருக்கும் ந்யாயங்களைப் பராமர்ஸித்து ஜகத்தின் ஸ்ரேயஸ்ஸுக்காகவே ப்ரவ்ருத்திக்கும் இந்த ஆசார்ய ஸ்தாநங்கள் விஷயத்தில் நேர்ந்திருக்கும் தவறுதலை மாற்றுவா ரென்று நம்புகிறோம்.

---